விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23
ஒலி 143 வள்ளுவர் ஆண்டு 2053 சித்திரை 28 புதன்கிழமை (11.05.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## திருமலை கடற்படை முகாமுக்குள் மகிந்தவின் குடும்பம் தஞ்சம்?

### மக்கள் அணி திரண்டு போராட்டம்



(திருகோணமலை)

முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது குடும்பத்தினர் திருகோணமலை கடற்படை தளத்தில் தஞ்சமடைந்துள்ளனர் 15



மல்வானையில் பசில் ராஜபக்ஷவின் வீடு தீக்கிரையாக்கப்பட்டது

### வன்முறையில் ஈடுபடுவோர் மீது

# துப்பாக்கிச் சூடு நடத்த உத்தரவு

### முப்படையினருக்கு பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு



(கொழும்பு)

வன்முறைகளில் ஈடுபட்டு பொதுச் சொத்துக்களைச் சூறையாடுபவர்கள் மற்றும் தனிப்பட்ட நபர்களுக்கு தீங்கிழைக்கும் வகையில் செயற்படுவோர் மீது துப்பாக்கிச் சூடு நடத்த முப்படையினருக்கு அதிகாரம் அளித்து பாதுகாப்பு அமைச்சு உத்தரவிட்டுள்ளது. (15ஆம் பக்கம் பார்க்க)

### நாளை காலை 7 மணிவரை

## ஊரடங்கு நீடிப்பு

(கொழும்பு)

நடைமுறையில் உள்ள ஊரடங்குச் சட்டம் நாளை 12 ஆம் திகதி காலை 7 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

முன்னதாக இன்று காலை 7 மணி வரையில் ஊர 15

### மேல் மாகாண சிரேஷ்ட

## பிரதிப் பொலிஸ்மா அதிபர் மீது தாக்குதல்

(கொழும்பு)

மேல் மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன், குழு 15

## ரத்கமவில் துப்பாக்கி சூடு நால்வர் படுகாயம்

(கொழும்பு)

ரத்கம பிரதேச சபைத் தலைவரின் வீட்டிற்கு அண்மையில் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் குறித்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் நான்கு பேர்வரை காயமடைந்துள்ளனர். (ம)

## ராஜபக்ஷக்களின் தந்தையார் சிலை



### உடைத்து வீழ்த்தப்பட்டது

(கொழும்பு)

தங்காலையில் உள்ள டி.ஏ.ராஜபக்ஷ சிலை நேற்று உடைத்து வீழ்த்தப்பட்டது.

டி.ஏ. ராஜபக்ஷ முன்னாள் பிரதமர் மகிந்த, ஜனாதிபதி கோட்டாபய, 15

### நாடளாவிய ரீதியில் வன்முறை

## 8 பேர் பலி; 400 பேர் படுகாயம்; 103 வீடுகள், 88 வாகனங்கள் சேதம்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதல்கள் மற்றும் வன்முறைச் சம்பவங்களில் 8 பேர் உயிரிழந்துள்ளதுடன் 400 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

மேலும், 47 வாகனங்கள் முற்றாக எரிக்கப்பட்டுள்ளதோடு 41 வாகனங்கள் சேதமாக்கப்பட்டுள்ளன.

அத்துடன், 38 வீடு 15



## மகிந்த நாட்டைவிட்டு ஓடமாட்டார் நாங்களும் வெளியேறமாட்டோம்

### நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நாட்டை விட்டு வெளியேறமாட்டார் என அவரது மகனும் முன்னாள் அமைச்சருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஊடகமொன்றுக்கு நேற்று வழங்கிய நேர்காணலில் நாமல் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ நாட்டை விட்டு வெளியேறும் நோக்கில் திருகோணமலையில் உள்ள கடற்படைத் தள 15

### சண்டிலிப்பாய் பகுதியில்

## அங்கஜன் இராமநாதனின் பாதாகைக்கு தீவைப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் பகுதியில் அமைந்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் மக்கள் தொடர்பு அலுவலகம் முன்பாக இருந்த பாராளுமன்ற 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை கண்டிக்கின்றோம்

## ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தீவில் எழுந்த அரசியல் பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து அதற்குத் தீர்வு வேண்டி கடந்த ஒருமாத காலமாக காலிமுகத்திடலில் இடம்பெற்றுவந்த கட்சி சார்பற்ற அமைதிவழிப் போராட்டத்தின் மீது நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காடையர்களை திட்டமிட்ட ரீதியில் ஏவி நடத்தப்பட்ட வன்முறைத் தாக்குதலை ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு ஆகிய நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

தமிழர்களாகிய நாங்கள் இவ்வாறான நிலைமைகளை கடந்த பல தசாப்தங்களாக எதிர்கொண்டவர்கள் என்றவகையில் உங்கள் வலிகளை நாங்கள் புரிந்து கொள்கின்றோம்.

வன்முறை மற்றும் ஒடுக்குமுறை சார்ந்து, பிரச்சினைகளைத் தீர்க்க முனையும் அபாயகரமான முறைமையை இல்லாது செய்ய அனைத்து முற்போக்கு சக்திகளும் முன்வரவேண்டும் என கோரி நிற்கின்றோம் என்று ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு தெரிவித்துள்ளது. (ம)

# வன்முறை, பழிவாங்கல்களை கைவிட்டு அமைதியைப் பேணுங்கள்

## நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி கோரிக்கை

(கொழும்பு)

வன்முறை மற்றும் பழிவாங்கும் செயல்களை நிறுத்தி, அமைதியைக் கடைப்பிடிக்குமாறு நாட்டு மக்களிடம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.

அரசியலமைப்புக்குட்பட்டு ஒருமித்த கருத்துடன், அரசியல் ஸ்திரத்தன்மையை உறுதி செய்யவும், பொருளாதார நெருக்கடியை தீர்க்கவும் அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என டுவிட்டரில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதிவிட்டுள்ளார். (ம)

# புவி வெப்பநிலை மேலும் அதிகரிக்கும்

(கொழும்பு)

எதிர்வரும் 5 வருடங்களில் புவியின் வெப்பநிலை 1.5 பாகை செல்சியஸினால் அதிகரிப்பதற்கான சாத்தியப்பாடுகள் 50 சதவீதம் அளவில் உள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். (ம)




அராலி ஆவரம்பிட்டி

## முத்துமாரி அம்பாள்

### சங்காபிஷேக அன்னதான சபை



மேற்படி எமது அன்னதான சபையினரால் இவ்வாண்டும் (2022) திருவிழா ஒன்பது நாட்கள் மற்றும் சங்காபிஷேக காலங்களில் திருவிழா உபயகாரர்கள் மற்றும் உள்ளூர், வெளியூரில் வாழ்கின்ற அடியவர்களின் பங்களிப்புடன் அன்னதானம் இடம்பெறுவதற்கு அம்பிகையின் அருள் கைகூடியுள்ளது என்பதனை அடியவர்களுக்கு அறியத் தருகின்றோம்.

**குறிப்பு:** இவ்வருடம் ஆலய் திருவிழாவிற்கு முதல்நாள் 12.05.2022 அன்று அன்னதானம் சிறப்பான முறையில் இடம்பெறும்.

தொடர்புகளுக்கு:
பொருளாளர் மா.திரவியராசா
077 037 6159, 077 908 6483

(11339)


# இலங்கையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களுக்கு

## ஐ.நா மனித உரிமை ஆணையாளர் கண்டனம்

(கொழும்பு)

கடுமையான பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கிவரும் இலங்கையில் அதிகரித்துவரும் வன்முறைச் சம்பவங்களுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான ஆணையாளர் மிச்செல் பச்லெட் கண்டனம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டோர் மீது, முன்னாள் பிரதமரின் ஆதரவாளர்கள் தாக்குதல் நடத்தியதை அடுத்து ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கு எதிரான வன்முறைகள் உட்பட இலங்கையில் வன்முறைகள் அதிகரித்து வருவதால், தாம் மிகவும் கவலையடைந்துள்ளதாக பச்லெட் அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அனைத்து வகையான வன்முறைகளையும் நாங்கள் கண்டிக்கிறோம் மற்றும் அனைத்து தாக்குதல்கள் குறித்தும் விரிவான மற்றும் வெளிப்படையான விசாரணையை தொடங்குமாறு அதிகாரிகளை வலியுறுத்துகிறோம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (ம)


# மரண அறிவித்தல்

பிறப்பு
06 . 02 . 1943



இறப்பு
07 . 05 . 2022

## திருமதி ரங்கநாதன் பத்மாவதி

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் தற்போது நெடியகாடு வல்வெட்டித்துறையில் வசித்து வந்தவருமான திருமதி ரங்கநாதன் பத்மாவதி அவர்கள் கடந்த 07.05.2022 சனிக்கிழமையன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லை நடராசா - காமாட்சி அம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற ரங்கநாதனின் அன்பு மனைவியும் பத்மநாதன் (நாதன்), லோகநாதன் (பாபு), தில்லைநாதன் (கண்ணன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் அமரலதா, சாந்தி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் அனார்த்தி, கிஷோக், சுவீதா, அஸ்வின் ஆகியோரின் பாட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (11.05.2022) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப 10 மணியளவில் தகனக் கிரியைக்காக ஊரணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: அனுஜிகன் - 077 428 2387
வசந்தன் - 077 205 7714
பாபு - 6476543814 (கனடா)
நாதன் - 6478331696 (கனடா)

AGA Lane,
நெடியகாடு,
வல்வெட்டித்துறை.

(11338)



# மரண அறிவித்தல்



## திருமதி பாலசுந்தரம் மங்கையற்கரசி
### (இராசாத்தி)

புற்றளை, புலோலி தெற்கைச் சேர்ந்த திருமதி பாலசுந்தரம் மங்கையற்கரசி (இராசாத்தி) கடந்த 09.05.2022 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - கோணாத்தைப்பிள்ளை தம்பதிகளின் மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கம்மா தம்பதிகளின் மருமகளும் கந்தையா பாலசுந்தரத்தின் (AO - Health Dept, Retd R/ACLG - AO, ACHC) அன்பான மனைவியும் மைதிலி, பைரவி ஆகியோரின் அன்பு நிறை தாயாரும் பகீரதன், திமாவளவன் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் ஈமக் கிரியைகள் நாளை (12.05.2022) வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஆனைவிழுந்தான் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:- க.பாலசுந்தரம் (கணவர்)
தொ.பே:- 021 226 4046

(C-4310)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசிற்கெதிரான ஆர்ப்பாட்டத்தின் மேலும் சில பதிவுகள்

சமலின் அலுவலகம்




ஞானக்காவின் வீடும் முற்றாக தீக்கிரை





பசிலுக்கு சொந்தமான வீடு
















**நேற்று முன்தினம் போராட்டக்காரர்களால் இடம்பெற்ற தீ வைப்பு சம்பவங்கள்**

1. சனத் நிஷாந்தவின் வீடு
2. திஸ்ஸ குட்டி ஆராச்சியின் வீடு
3. குருநாகல் மேயர் மாளிகை
4. ஜோன்ஸ்டன் வீடு மற்றும் அலுவலகம்
5. மொரட்டுவை மேயர் மாளிகை
6. எம்.பி அனுஷா பாஸ்குவலின் வீடு
7. பிரசன்ன ரணதுங்கவின் வீடு
8. ரமேஷ் பத்திரனவின் வீடு
9. சாந்த பண்டாரவின் வீடு
10. ராஜபக்ஷ பெற்றோரின் கல்லறை
11. நீர்கொழும்பில் உள்ள அவென்ரா கார்டன் ஹோட்டல்
12. அருந்திகாவின் வீடு
13. கனக ஹேரத்தின் வீடு
14. காமினி லொகுகேவின் வீடு
15. காலியில் உள்ள ரமேஷ் பத்திரனவின் வீடு
16. மொரட்டுவை மேயர் சமன் லால் இல்லம்
17. லான்சாவின் 2 வீடுகள்
18. வென்னப்புவ நைனாமடம ட்ரெவின்பெர்னான்டோ வீடு
19. யானை சபர் வீடு
20. பந்துல குணவர்தன வீடு
21. வீரகெட்டிய மெதமுலன வீடு
22. கேகல்ல மஹிபால ஹேரத் ஹவுஸ்
23. கொட்டிகாவத்தை ரேணுகா பெரேரா இல்லம்
24. கம்பஹா நாலக கொடஹேவா இல்லம்
25. விமல் வீரவன்சவின் வீடு
26. அசோசியேட் சூப்பர் சென்டர் காலி
27. சிறிபாலகம்லத் வீடு
28. கெஹலிய ரபுக்வெல்ல வீடு
29. ரோஹித அபேகுணவர்தன இல்லம்
30. நீர்கொழும்பு குரான கிராண்டீசா ஹோட்டல்
31. காஞ்சனா விஜேசேகர இல்லம்
32. துமிந்த திசாநாயக்க வீடு
33. முன்னாள் இராஜாங்க அமைச்சர் கபில துவன் அத்துகோறள வீடு
34. சமலின் அலுவலகம்
35. சோதிடர் ஞானாக்கா வீடு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி வெற்றி

ஐ.பி.எல். இருபது-20 தொடரின் 56ஆவது லீக் போட்டியில், கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி 52 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

மும்பை மைதானத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற இப்போட்டியில், கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியும் மும்பை இந்தியன்ஸ் அணியும் பலப்பரீட்சை நடத்தின.

இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற மும்பை இந்தியன்ஸ் அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20



ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 165 ஓட்டங்களை பெற்றுக் - கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, வெங்கடேஷ் ஜயர் மற்றும் நிதிஷ் ரணா ஆகியோர் தலா 43 ஓட்டங்களை பெற்றுக் கொண்டனர்.

மும்பை இந்தியன்ஸ் அணியின் பந்துவீச்சில், ஜஸ்பிரிட் பும்ரா 5 விக்கெட்டுகளையும் குமார் கார்த்திகேயா 2 விக்கெட்டுகளையும் டேனில் சேம்ஸ் மற்றும் முருகன் அஸ்வின் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 166 என்ற வெற்றி இலக்கை நோக்கிப் பதிலுக்கு களமிறங்கிய மும்பை இந்தியன்ஸ் அணி, 17.3 ஓவர்கள் நிறைவில் 113 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால், கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி 52 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, இசான் கிசான் 51 ஓட்டங்களையும் கியரன் பொலார்ட் 15 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியின் பந்துவீச்சில், பெட் கம்மின்ஸ் 3 விக்கெட்டுகளையும் ஆந்ரே ரஸ்ஸல் 2 விக்கெட்டுகளையும் டிம் சௌத்தீ மற்றும் வருண் சக்கரவர்த்தி ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக மும்பை இந்தியன்ஸ் அணியின் பந்துவீச்சில் 5 விக்கெட்டுகளை வீழ்த்திய ஜஸ்பிரிட் பும்ரா தெரிவுசெய்யப்பட்டார். (4)

பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான ஆண்களுக்கான நீளம் பாய்தல் போட்டியில் சென்தோமஸ் விளையாட்டுக் கழகத்தைப் பிரதிநிதித்துவம் செய்த கு.சோபிகன் தங்கப்பதக்கத்தைச் சுவீகரித்துள்ளார். அதே கழகத்தைச் சேர்ந்த த.ஜனிஸ்ரன் வெள்ளிப் பதக்கத்தையும், சிவானந்தா விளையாட்டுக் கழகத்தைப் பிரதிநிதித்துவம் செய்த த.டிஜய் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (படம்-கனகராஜா)





பருத்தித்துறை பிரதேச செயலக பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான பெண்களுக்கான நீளம் பாய்தலில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டு வீராங்கனைகள் அனைத்து பதக்கங்களையும் சுவீகரித்துக் கொண்டனர். (படம்-கனகராஜா)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2612

யானுஷா

மனிதனின் மாறுபட்ட இரண்டு மோசமான குணங்கள்...! ஒன்று துரோகம்! மற்றொன்று பொறாமை...



பக்த வக்சலன்




சிவதனுஷ்

ஒவ்வொரு அனுபவத்தின் முடிவிலிருந்தும் ஒரு நல்ல பாடத்தை கற்றுக் கொள்வோம்... அதுவே நாம் வாழ்க்கையில் வெற்றியடைய உதவும்



தனுசன்




துவாரகா



யாரையும் பகைத்துக் கொள்ளாமல் இருக்க முடியும் என்றால் நடித்துக் கொண்டு தான் இருக்க முடியும்.

சுரேஜிதா

அடுத்தவர்
சொல்வதை நம்பி ஒருவர் இப்படித்தான்
என்று எப்போதும் முடிவு செய்யாதீர்கள்
அப்படி செய்வதாக இருந்தால்
நமக்கு
எதற்கு மூளை?

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இராணுவ ஆட்சி அமுல்படுத்தப்படலாம்

## — சந்திரிகா எச்சரிக்கை —



(கொழும்பு)

**தற்போதைய சூழ்நிலையில் நாட்டில் இராணுவ ஆட்சி அமுல்படுத்தப்படும் என இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க எச்சரித்துள்ளார்.**

ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்திற்கு எதிராக கடந்த சில வாரங்களாக அலரிமாளிகைக்கு அருகாமையிலும், கொழும்பு காலிமுகத்திடலிலும் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த பொதுமக்கள் மீது பொதுஜன பெரமுனவின் ஆதரவாளர்கள் நேற்று தாக்குதல் நடத்தியதை அடுத்து நாட்டில் அமைதியின்மை ஏற்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் டுவிட்டரில் பதிவிட்டுள்ள இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி பொதுமக்களிடம் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

"நீதி மற்றும் ஜனநாயக ஆட்சிக்காக அற்புதமான போராட்டத்தை நடத்தி வரும் அனைத்து குடிமக்களுக்கும் நான் வேண்டுகோள் விடுக்கிறேன், இராணுவ ஆட்சிக்கு வழி வகுக்கும் வகையில் வன்முறையைத் தூண்டுவதற்கு நாசகாரர்கள் பயன்படுத்தப்படலாம் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். தயவு செய்து இதை நிறுத்த உங்கள் திறமையைப் பயன்படுத்தவும்" என பதிவிட்டுள்ளார். (நி)

## திருகோணமலைக்கு
## தப்பிச் சென்ற மகிந்த குடும்பம்
## வைரலாகும் காணொளி காட்சிகள்



(கொழும்பு)

நாமல் ராஜபக்ஷவின் மனைவி மற்றும் மகன் உலங்கு வானூர்தியில் தப்பிச்செல்லும்காணொளி காட்சி சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ளது.

நாமல் ராஜபக்ஷவின் மனைவி லிமினி மற்றும் அவரது மகன் கேசரா ஆகியோர் நேற்றுக் காலை கொழும்பில் இருந்து திருகோணமலைக்கு தப்பிச் சென்றதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அவரது மனைவியுடன் நேற்றுக் காலை திருகோணமலைக்கு தப்பிச் சென்று அங்கு தங்கியிருப்பதாக தகவல்கள் வெளியான நிலையில், தற்போது நாமல் குடும்பம் தப்பிச் செல்லும் காணொளி வெளியாகியுள்ளது. (நி)

## பாராளுமன்றத்தை உடனடியாக கூட்டுமாறு ஜனாதிபதியிடம் சபாநாயகர் வேண்டுகோள்

(கொழும்பு)

பாராளுமன்றத்தை உடனடியாக கூட்டுமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய நிலைமை மற்றும் எடுக்க வேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து இன்று நடைபெறும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்படும் என சபாநாயகர் தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்களின் கருத்துக்கள் குறித்து கலந்துரையாடுவதே இதன் நோக்கமாகும் என சபாநாயகர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, கடந்த 6 ஆம் திகதி சபாநாயகரினால் பாராளுமன்ற அமர்வு எதிர்வரும் 17 ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது.

இதேவேளை, முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பதவி விலகல் காரணமாக புதிய பிரதமரை தெரிவுசெய்யும்பொறுப்பு பாராளுமன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.



இன்று முற்பகல் 10 மணிக்கு கட்சித் தலைவர்களின் கூட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளதாகவும் தற்போதைய சூழ்நிலையில், கூட்ட நேரத்தில் மாற்றம் ஏற்படலாம் எனவும் சபாநாயகர் குறிப்பிட்டுள்ளார். (நி)

## மொரட்டுவையில் 'சமன் லால் கோ கம'

(கொழும்பு)

மொரட்டுவை மேயர் சமன் லால் பெர்னாண்டோவிற்கு எதிராக அப்பிரதேசத்தில் 'சமன் லால் கோ கம' அமைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்தை பதவி விலகுமாறு வலியுறுத்தி நாட்டில் தொடர்ச்சியாக ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

## இராசிபலன்

11.05.2022
சித்திரை 28, புதன்கிழமை
தசமி பிற்பகல் 4.11 மணிவரை

பூரம் பிற்பகல் 4.27 மணிவரை
சுபநேரம் 4.24-5.54 மணிவரை
இராகுகாலம் 11.54-1.24 மணிவரை

சந்திராஷ்டமம்
அவிட்டம்

வளவன்




புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய சம்பங்கள் இடம்பெறலாம், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள்.




உங்களின் செய்றபாட்டுக்கு மற்றவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், நன்மைகள் நடைபெறும் நாள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், சுப செய்திகள் வந்து சேரலாம்.




எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன்வரலாம், குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சிகள் எளிதில் கைகூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




சிந்தித்துச் செயறபட்டு சிறப்புக்களை காணும் நாள், உங்கள் செயற்பாடுக ளில் மற்றவர்கள் குறைகண்டு கூறலாம், ஆரோக்கியத்தில் அக்கறை கூடும் நாள்.




நண்பர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவர், உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.




நண்பர்கள் ஒழிவு மறைவின்றி பழகுவார்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள்,கற்பனை மிகுதியான நாள், ஆரோக்கியத்தில் அக்கறை கூடும்.




உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்,செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், காரிய அனுகூலமுண்டு.




கௌரவமான சம்பவங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.




செய்தொழிலில் முன்னேற்றம் காணும் நாள், பொதுப் பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், பொருளாதார நிலையில் திருப்தி ஏற்படலாம், போசன சுகமுண்டு.




எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், வீட்டுத் தேவைகளில் ஆர்வம் கூடும், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், மனச்சஞ்சலங்கள் கூடும் வாய்ப்புண்டு.




ஆன்றோர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், ரோக பயமுண்டு.




தொழிலில் உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், உடல் நலனில் இருந்த பாதிப்புக்கள் அகலும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு.

சின்னச் சின்ன ஆசையுடையதே வாழ்க்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நிலைமை மோசம்

# அத்தியாவசிய பொருட்களை பதுக்காது பொது மக்களுக்கு பகிர்ந்து வழங்குங்கள்

## வர்த்தகர்களுக்கு யாழ்.அரச அதிபர் அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

**தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலை காரணமாக அத்தியாவசியப் பொருட்களை எடுத்து வருவதில் தாமதங்கள் ஏற்படலாம் என்பதால் யாழ்ப்பாணம் வர்த்தகர்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் பொறுப்புடன் செயற்பட்டு பொதுமக்களுக்கு பொருட்களை வழங்கவேண்டும் என யாழ்.மாவட்டச் செயலாளர் க.மகேசன் வலியுறுத்தியுள்ளார்.**



தற்போதைய நிலையில் பொருட்களை பதுக்குதல் மற்றும் அதிக விலைக்கு விற்பனை செய்வதனை வர்த்தகர்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் தவிர்க்க வேண்டும் என்று அவர் கேட்டுள்ளார்.

"சில இடங்களில் வர்த்தகர்கள் பொருட்களை பதுக்குதல் மற்றும் அதிக விலைக்கு விற்பனை செய்வதாக முறைப்பாடுகள் கிடைக்கின்றன.

அவை தொடர்பில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை கண்காணிப்புகளை மேற்கொள்ளும்.

தென்னிலங்கையிலிருந்து அத்தியாவசியப் பொருட்களை எடுத்து வருவதற்கு ஒரு வாரம் தாமதமாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது .

எனவே பொதுமக்கள் அத்தியாவசியப்பொருட்களை பகிர்ந்து விற்பனை செய்வது தொடர்பிலும் தற்போதைய நிலையை எவ்வாறு எதிர்கொள்வது தொடர்பிலும் யாழ்ப்பாணத்திலுள்ள வர்த்தக சங்கங்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களுடன் பேச்சு நடத்தப்படவுள்ளது" என்றும் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலாளர் தெரிவித்தார். (4-33)



GRACE TRUST நிறுவனத்தின் நிதிப் பங்களிப்புடன் இந்தியாவிலிருந்து மீளத் திரும்பியவர்களுக்கான காணியுடனான வீட்டுத்திட்ட உறுதிப்பத்திரம் வழங்கல் நிகழ்வு அண்மையில் நீர்வேலி போயிட்டிப் பகுதியில் மேற்படி நிறுவனத்தின் பொது முகாமையாளர் வி.எம்.ரவீந்திரகுமார் தலைமையில் இடம்பெற்றது. (படம் : ரவிசாந்)

## சடலத்தைப் பொறுப்பேற்கவும்

(கரணவாய்)

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் உள்ள சடலத்தை உரிமை கோருமாறு அவ் மருத்துவமனை நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் பருத்தித்துறை கிராமக்கோடு வீதியால் நடந்து வந்த வயோதிபர் மயங்கி விழுந்த நிலையில் அம்புலன்ஸ் மூலம் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் அவர் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்தார்.

மருத்துவமனை நிர்வாகத்தினரால் குறித்த நபர் தொடர்பான விபரங்கள் எதனையும் பெற முடியாமையால் பருத்தித்துறை மற்றும் நெல்லியடி பொலிஸ் நிலையங்களுக்கு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.

தற்பொழுது கரவெட்டி மரண விசாரணை அதிகாரி வேலுப்பிள்ளை பாஸ்கரன் உறவினர்களை வருகை தந்து சடலத்தை பொறுப்பேற்குமாறு கேட்டுள்ளார். (4-60)



போதை தடுப்புத் தொடர்பான விழிப்புணர்வுச் செயலமர்வு நிகழ்வு அண்மையில் அச்சுவேலி மேற்கு செல்வநாயகபுரத்தில் ஜே-287 கிராம உத்தியோகத்தர் வி.கோபாலதாஸ் தலைமையில் நடைபெற்றது. (படம் : ரவிசாந்)

## அரச ஆதரவு எம்.பி.களின் அலுவலகங்களுக்கு பாதுகாப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் அரச ஆதரவு எம்.பி.க்களின் அலுவலகங்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

நாடுபூராகவும் அரச ஆதரவு எம்.பி.க்களின் வீடுகள், அலுவலகங்கள் தாக்கப்பட்டு தீக்கிரையாக்கப்பட்ட சம்பவங்கள் இடம்பெற்றுள்ள நிலையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் அரச ஆதரவு எம்.பி.களான டக்ளஸ் தேவானந்தா மற்றும் அங்கஜன் இராமநாதனின் அலுவலகங்களும் தாக்கப்படலாம் என்ற அச்சத்தில் எம்.பி.க்களின் அலுவலகங்களுக்கு அருகில் பொலிஸார், இராணுவத்தினர் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (4-33-104)

## யாழில் வன்முறைச் சம்பவங்கள் எதுவும் இடம்பெறவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் எந்த விதமான வன்முறைச் சம்பவங்களும் பதிவாகவில்லை என வடக்கு பொலிஸ் மா அதிபரின் அலுவலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாடுபூராகவும் மகிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள் மற்றும் அரசதரப்பு ஆதரவாளர்களின் வீடுகள் வாகனங்கள் எரியூட்டப்பட்டதோடு தாக்கப்பட்ட நிலையில் நாடுபூராகவும் அரச ஆதரவாளர்களின் மீது தாக்குதல் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போது வரை எந்தவிதமான வன்முறைச் சம்பவங்களும் பதிவாகவில்லை. (4-33)




நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில் யாழ்ப்பாணத்திலும் வீதிகள் வெறிச்சோடி காணப்படுவதுடன் கடைகள், பொதுச் சந்தைகள், அரச நிறுவனங்கள் அனைத்தும் மூடப்பட்டு காணப்பட்டன. (படங்கள் :- ரவிசாந், சிவசாந்தன், மகாலிங்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சுவார்த்தை மூலம் நெருக்கடிக்கு தீர்வு காணுமாறு ஐ.நா. அழைப்பு

(கொழும்பு)

**மகிந்த ராஜபக்ஷவின் பதவி விலகலை அடுத்து ஏற்பட்டுள்ள நெருக்கடிக்குத் தீர்வு காண இலங்கையில் பேச்சுவார்த்தை நடத்தப்படவேண்டும் என ஐக்கிய நாடுகள் சபை அழைப்பு விடுத்துள்ளது.**

மஹிந்த ராஜபக்ஷவின் இராஜினாமாவை ஐ.நா கவனத்தில் எடுத்துள்ளதாக ஐ.நா செயலாளர் நாயகத்தின் பிரதிப் பேச்சாளர் பர்ஹான் ஹக் தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்களின் நலன்களை மனதில் கொண்டு தீர்வு காண அனைத்து இலங்கை பங்குதாரர்களையும் நாங்கள் தொடர்ந்து ஊக்குவிக்கிறோம்.

அதே சமயம், அமைதியான போராட்டக்காரர்களுக்கு எதிரான சமீபத்திய வன்முறைகள் குறித்தும் ஐ.நா. கவலை கொண்டுள்ளது.

ஐ.நா. அமைதி மற்றும் கட்டுப்பாடு, அத்துடன் கருத்து சுதந்திரம் மற்றும் அமைதியான ஒன்றுகூடல் உரிமை உள்ளிட்ட ஜனநாயக உரிமைகளுக்கு மதிப்பளித்துள்ளது என அவர் தெரிவித்தார். (நி)

## முழுமையான விசாரணை நடத்துமாறு சட்டமா அதிபர் பணிப்பு

(கொழும்பு)

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பிலான முழுமையான விசாரணையை நடத்துமாறு பொலிஸ்மா அதிபருக்கு சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினம் ஆலோசனை வழங்கியுள்ளார்.

சம்பந்தப்பட்ட விடயங்களின் தீவிரத் தன்மையைக் கருத்திற்கொண்-டு, அரசியலமைப்பில் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகளை மீறும் வகையில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து முழுமையான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு அவர் அறிவுறுத்தியுள்ளார். (நி)

# தாக்குதலின் சூத்திரதாரி மகிந்தவை கைது செய்யுங்கள்

## சட்டத்தரணிகள் கோரிக்கை

(கொழும்பு)

மைனா கோ கம மற்றும் கோட்டா கோ கம போராட்டத்தின் மீதான நேற்று முன்தினம் நடைபெற்ற தாக்குதலை திட்டமிட்ட முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை உடனடியாக கைது செய்ய சட்ட நடவடிக்கை எடுக்குமாறு சட்டத்தரணிகள் பொலிஸ் மா அதிபரிடம் கோரிக்கை விடுத்தனர்.

கொழும்பு நீதிவான் நீதிமன்றில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே சட்டத்தரணி குணரத்ன வன்னிநாயக்க இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இந்தத் தாக்குதலைத் திட்டமிட்டதாகக் குற்றம் சுமத்திய வன்னிநாயக்க, இந்தத் தாக்குதலுக்கு பாதுகாப்புச் செயலாளர், பொலிஸ்மா அதிபர், மேல் மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் மற்றும் ஏனைய பொலிஸ் உத்தியோகத்தர்கள் உதவியதாகவும்

எனவே இவர்களுக்கு எதிராக சட்டத்தை உடனடியாக அமுல்படுத்த வேண்டும் எனவும் சட்டத்தரணி வன்னிநாயக்க தெரிவித்துள்ளார். (நி)

# நாட்டில் நடைபெற்ற வன்முறை தொடர்பில் உலக வங்கி கவலை வெளியீடு

(கொழும்பு)

இலங்கையின் பல பகுதிகளில் நேற்று முன தினம் இடம் பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் பல்வேறு தரப்பினரும் தமது கண்டனங் களைத் தெரிவித்து வருகின்றனர். இது தொடர்பில் உலக வங்கி வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில்,

அரசாங்க ஆதரவாளர்களால் போராட்டக்காரர்கள் தாக்கப்பட்ட நிலையில், இலங்கையின் தற்போதைய நிலை குறித்து உலக வங்கி நேற்று கடுமையான கவலைகளை வெளிப்படுத்தியது என இலங்கைக்கான உலக வங்கி இயக்குனர் ஃபரிஸ் எச்.ஹடாட்-ஜெர்வோஸ் நேற்று முன்தினம் டுவிட் செய்தார்.

பொறுப்புள்ளவர்கள் நாட்டின் உடனடி பொருளாதர மீட்சியின் வழியில் நிற்கிறார்கள் மற்றும் வளர்ச்சி பங்காளிகளுக்கு பணியை இன்னும் கடினமாக்குகிறார்கள் என்று அவர் தெரிவித்தார். (நி)

# மகிந்தவை சட்டத்தின் முன் நிறுத்துங்கள்- ரஞ்சித் மத்தும

(கொழும்பு)

முன்னாள் பிரதமர் மகிந்த ராஜ பக்ஷவை கைது செய்து உடனடியாக சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி கேட்டுக் கொண்டுள்ளது.

அமைதியான போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்திய வழக்கில் முதல் குற்றவாளி அவரே என அக்கட்சியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார். (நி)



# வாழும் வரை அரசியலுக்கு திரும்ப மாட்டேன்- குணபால



(கொழும்பு)

தான் அரசியலில் இருந்து ஒரு ரூபாய் கூட சம்பாதிக்க வில்லை என்றும், பிரத்தியேக வகுப்புகளை நடத்திச் சம்பா தித்த சொத்துக்கள் அனைத்தும் தீயிட்டு எரித்து நாச மாக்கப்பட்டுள்ளதாக பாராளு மன்ற உறுப்பினர் குணபால ரத்னசேகர தெரிவித்துள்ளார்.

மேலும் தான் வாழும் வரை அரசியலுக்கு திரும்ப மாட்டேன் என்றும் தனது முகநூல் பக்கத்தில் அவர் தெரிவித் துள்ளார். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1992கிறிஸ்தவம் NRC
உயரம்: 165 cm
தகைமை/தொழில்:மென் பொறியியலாளர்
எதிர்பார்ப்பு:அரச. தனியார் உத்தியோகம்
RC ஏற்றுக்கொள்ளப்படும்.
தொ.இ: B/12624

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம் : பூசம் 2
கி.பா: சூரி .செவ் 11 இல்
உயரம்:6'
தகைமை/தொழில்:Network Engineer
அமெரிக்கா PR
எதிர்பார்ப்பு :படித்த பெண்
தொ.இ: B/12628

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: பூசம் 4
கி.பா: 52 சூரி 11 செவ் 1 இல்
உயரம்:5'7"
தகைமை/தொழில்: CIMA,ACMA ACCA
கணக்காளர் (டுபாய்)
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/12630

பிறப்பு:1992 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி 1
கி.பா:சூரி 3 செவ் 12 இல்
உயரம்:5'8"
தகைமை/தொழில்:முகாமைத்துவ
உதவியாளர்
எதிர்பார்ப்பு: அரச. தனியார் உத்தியோகம்
ஆசிரியர் விரும்பத்தக்கது
தொ.இ: B/12634

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு:1997 இந்து
நட்சத்திரம்: ரோகிணி
கி.பா:50 சூரி 4 செவ் 6 இல்
உயரம்:5'2"
தகைமை/தொழில்:சட்டத்தரணி
எதிர்பார்ப்பு: உயர்பதவி
தொ.இ: G/12667

பிறப்பு:1991 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி 2
கி.பா:32 ½சூரி 11 செவ் 1 இல்
உயரம்:5'2'
தகைமை/தொழில்:BA (Finearts)
பட்டதாரி ஆசிரியர்
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம் அல்லது
வெளிநாடு
தொ.இ:G/12671

பிறப்பு:1993 இந்து
நட்சத்திரம்: அவிட்டம் 4
கி.பா:சூரி 12 செவ் 2 இல்
உயரம்: 157 cm
தகைமை/தொழில்:BSc (Hons)in Civil Engineer
எதிர்பார்ப்பு: பொறியியலாளர் உள்நாடு மட்டும்
தொ.இ:G/12673

பிறப்பு: 1997இந்து
நட்சத்திரம்:சித்திரை 4
கி.பா: 26 ½ சூரி 3 செவ் 6 இல்
உயரம் : 5'1'
தகைமை/தொழில் :அச்சக வேலை. சதுரங்க கோச் செய்தல்
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ:G/12677

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 42

# யார் மனதையும் நோகடிக்காதே!



முன்னாள் குடியரசுத்தலைவர் அப்துல் கலாம் வாழ்வில் நடந்த ஒரு உண்மைச் சம்பவத்தை இன்று தற்செயலாக நாளிதழில் படிக்க நேரிட்டது....

இதோ... அப்துல் கலாமின் வார்த்தைகளில்,

அவரது இளமைக்கால வாழ்க்கை,

"நான் சிறுவனாக இருக்கும் போது... ஒரு நாள் இரவு நேரம் ... வெகு நேர வேலைக்குப் பின்னர் என் தாய் இரவு சிற்றுண்டி செய்யத் தொடங்கினார்...

என் தாயும் எங்கள் குடும்பத்தை சமாளிக்க வேலைக்குச் செல்வது வழக்கம்...

சமைத்த பின் கருகிய ரொட்டி ஒன்றை என் கண் முன் , என் தந்தைக்கு பரிமாறினார் என் தாய் ..... ஆனால் என் தந்தையோ அதை சிறிதும் பொருட்படுத்தாமல் சாப்பிட்டார்....

'இன்றைய பொழுது பள்ளியில் எப்படிப் போனது ' என்று என் தந்தை என்னிடம் கேட்டார்.

நான் அன்று என்ன பதில் சொன்னேன் என்று தெரியவில்லை...

என் தந்தையிடம் கருகிய ரொட்டியை பரிமாறியதற்கு வருத்தம் தெரிவித்தார் என் தாய்...

ஆனால் அதற்கு என் தந்தையோ .."எனக்கு கருகிய ரொட்டிதான் ரொம்ப பிடிக்கும் " என்று பதில் சொன்னதை என்னால் இன்றும் மறக்க முடியாது ....

சாப்பிட்டு முடித்த சற்று நேரத்துக்குப் பின்... நான் மெல்ல என் தந்தை அருகில் சென்று இரவு வணக்கம் சொல்லிவிட்டு, அவரிடம் தயக்கத்துடன் கேட்டேன்,

"அப்பா ... உங்களுக்கு உண்மையாகவே கருகிய ரொட்டி ரொம்பப் பிடிக்குமா..?"

சற்று நேரம் அமைதியாக இருந்த என் தந்தை , என்னை இறுக்கமாக அணைத்துக் கொண்டு சொன்னார்....

"மகனே...உங்க அம்மா தினமும் வேலைக்கும் சென்று கொண்டு, நமக்கும் பணிவிடை செய்கிறார்.

களைத்துப் போய் இருப்பார்...

ஒரு கருகிய ரொட்டி யாரையும் காயப்படுத்தப் போவதில்லை...

ஆனால் கடும் வார்த்தைகள் கண்டிப்பாக காயப்படுத்தும்...

நான் ஒன்றும் சிறந்த மனிதன் அல்ல... ஆனால் அதற்கு முயற்சிக்கிறேன்...

இவ்வளவு வருடங்களில் நான் கற்றுக்கொண்டது....

நடப்பது எதுவாக இருந்தாலும் அதை ஏற்றுக்கொண்டு சந்தோஷமான மனநிலைக்கு நாம் மாறுவதே ....

அப்துல் கலாமின் இந்த அனுபவத்தைப் படித்தபோது அவரது அப்பா மீது, அளவில்லாத மரியாதை எழுந்தது...

அது இன்று முழுவதும் என்னைத் தொடர்ந்து வந்தது...

ஆம்.. "ஒரு கருகிய ரொட்டி யாரையும் காயப்படுத்தப் போவதில்லை ...

ஆனால் கடும் வார்த்தைகள் கண்டிப்பாக காயப்படுத்தும்...."

இந்தத் தத்துவத்தை எண்ணியபடியே இன்று இரவு சாப்பிட அமர்ந்தபோது ...

எனக்கு பரிமாறப்பட்ட உணவு கொஞ்சம் ஆறித்தான் போய் இருந்தது...

ஆனால் என் உணர்வுகள் ரொம்பவுமே மாறிப்போய் இருந்தது...

மனைவியின் உணவை இனி ஒருபோதும் குறை சொல்லக் கூடாது என்ற திருந்திய மன உணர்வோடு, இருந்ததை இனிதே உண்டு முடித்தேன்...

எதிர்காலத்தில் நம் குழந்தைகள் கலாமின் கொள்கைகளை கடைப்பிடிக்கட்டும்..

இப்போது நாம் கொஞ்சம் அவரது அப்பாவின் கொள்கைகளை கடைப்பிடிக்கலாமே...!!!

நான் ஒன்றும் சிறந்த மனிதன் அல்ல ...

ஆனால் அதற்கு முயற்சிக்கிறேன்...!!!

**அன்பு வாசகர்களே!**

முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.

# உக்ரைன் –

# 2024 வரை வி

## உ

(ஜெனிவா)

**உக்ரைன் மீதான ரஷ்யாவின் சர்வதேச ரீதியாக பாரிய வ செய்துள்ளது.**

# அணு ஆயுத சோதனையை கைவிட்டால் உதவி செய்வோம்

## வடகொரியாவுக்கு தென்கொரியா அழைப்பு

(பியாங்யாங்)

வடகொரியா தனது அணு ஆயுதங்களை கைவிடுவது தொடர்பான பேச்சுவார்த்தைக்குத் திரும்ப வேண்டுமென அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகள் தொடர்ந்து வலியுறுத்தி வரும் நிலையில், அதற்கு செவிசாய்க்காமல் வடகொரியா தொடர்ச்சியாக ஏவுகணை சோதனைகளை நடத்தி அதிர வைத்து வருகிறது.

இந்த ஆண்டில் மட்டும் வடகொரியா 15 ஆவது ஏவுகணை சோதனையை நடத்தி இருக்கிறது. இது தென் கொரியாவிற்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளது.

விரைவில் வடகொரியா அணு ஆயுதங்களையும் சோதிக்கலாம் என யூகங்கள் எழுந்துள்ளன.

இந்நிலையில் வடகொரியா தனது அணு ஆயுத பரிசோதனைகளை கைவிட்டால், அந்நாட்டின் பொருளாதாரத்தை வளரச் செய்யும் வகையில் மிக துணிச்சலான திட்டம் ஒன்றை வழங்குவதாக தென் கொரியா அறிவித்துள்ளது.

இரு நாடுகளுக்கும் நல்லிணக்கம் ஏற்படும் வகையில் இந்த அறிவிப்பை தென் கொரியாவின் புதிய ஜனாதிபதி யூன் சுக்-யோல் தெரிவித்துள்ளார். (நி)

# தெலுங்கானா விபத்தில் 9 பேர் உயிரிழப்பு



(டில்லி)

தெலுங்கானா மாநிலத்தில் பயணிகள் வாகனம் மீது லொறி ஒன்று மோதியதில் 9 பேர் உயிரிழந்துள்ளதுடன், 17 பேர் காயமடைந்துள்ளனர்.

கம்மம் மாவட்டத்தைச் சேர்ந்த இருபதுக்கு மேற்பட்டோர் துக்க நிகழ்வொன்றில் கலந்துவிட்டு மீண்டும் ஊர் திரும்பிக்கொண்டிருக்கையில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# – ரஷ்யா ஆக்கிரமிப்பால்
# விலை அதிகரிப்புக்கள் தொடரும்
## உலக வங்கி தெரிவிப்பு

**...ின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் ...ப விலை ஏற்றத்தினை பதிவு**

இதற்கமைய இலங்கை உள்ளிட்ட சர்வதேச நாடுகளில் அத்தியாவசியப் பொருட்களின் சந்தை விலைகளில் ஏற்பட்டுள்ள பாரிய அதிகரிப்பு எதிர்வரும் 2024 ஆம் ஆண்டு இறுதிவரை தொடரும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 1973 ஆம் ஆண்டிற்கு பின்னர் எரிபொருட்களின் விலைகள் கடந்த இரண்டாண்டுகளாக அதிகரித்துள்ளது.

அதேபோல கடந்த 2008 ஆம் ஆண்டின் பின்னர் உணவுப் பொருட்களின் விலைகள் அபரிமிதமாக அதிகரித்துள்ளன.

உலக வங்கியினால் வெளியிடப்பட்ட அண்மைய அறிக்கையில் இது தொடர்பான விபரங்கள் பதிவாகியுள்ளன.

ரஷ்யா முன்னணி எண்ணெய், இயற்கை வாயு மற்றும் நிலக்கரி ஏற்றுமதி நாடொன்றாக உள்ள அதேவேளை, உக்ரைன் கோதுமை மற்றும் சோளம் ஆகிய பொருட்களை ஏற்றுமதி செய்யும் முக்கிய நாடாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# ரஷ்ய அமைச்சர் மீது சிவப்பு சாயம் வீசி தாக்குதல்
## ரஷ்யாவின் வெற்றிக் கொண்டாட்டத்தில் சம்பவம்



(வார்சா)

போலந்து தலைநகர் வார்சாவில் நடந்த ரஷ்யாவின் வெற்றிதினக் கொண்டாட்டத்தில் கலந்து கொண்ட ரஷ்ய அமைச்சர் மீது எதிர்ப்பாளர்கள் சிவப்பு சாயம் வீசி தாக்குதல் நடத்தினர்.

வார்சாவில் உள்ள சோவியத் இராணுவ நினைவிடத்தில் மரியாதை செலுத்துவதற்காக சென்ற ரஷ்யத் அமைச்சர் செர்கய் ஆன்ட்ரீவ் மீதே அங்கு கூடியிருந்த ரஷ்யாவுக்கு எதிரான உக்ரைன் ஆதரவாளர்கள், எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

அங்கு திரண்டிருந்த உக்ரைன் ஆதரவாளர்கள், கைகளில் உக்ரைன் கொடியை ஏந்திய படி அமைச்சரைப் பார்த்து, 'பாசிஸ்ட்', 'கொலைகாரர்' எனக் கோஷமிட்டனர். அப்போது சிலர் அமைச்சர் மீது சிவப்பு சாயத்தை வீசினர்.

இந்தச் சம்பவம் குறித்து ரஷ்யாவின் வெளியுறவு அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளர் மரியா ஜக்காரோவா கூறுகையில், 'இந்தப் போராட்டம், ஏற்கனவே உள்ள ஒரு விடயத்தை உறுதிப்படுத்தியுள்ளது. மேற்கு உலக நாடுகள் நாசி[illegible] பிக்க புதிய தி[illegible] வாக்கியுள்ளன.

உக்ரைன் நாஜிகளால் கைப்பற்றப்பட்டு விட்டது என ரஷ்யா பல முறை கூறி வந்திருக்கிறது.

இதன் காரணமாக அந்த நாட்டின் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது' எனக் கூறினார்.

இரண்டாம் உலகப்போரில் நாஜிப் படைகளுக்கு எதிராக ரஷ்யா பெற்ற வெற்றியை நினைவு கூரும் விதமாக ஒவ்வொரு ஆண்டும் மே 9ஆம் திகதியை ரஷ்யா [illegible] குறிப்பிடத்தக்கது. (நி)

# கிழக்கு உக்ரைனிலும் ரஷ்யாவுக்கு தோல்வி
## ஒப்புக்கொண்ட புடின் ஆதரவாளர்



(மொஸ்கோ)

உக்ரைனை எளிதாகக் கைப்பற்றிவிடலாம் என்ற கனவுடன் வந்த ரஷ்யப் படைகள், தலைநகர் கீவ்வை கைப்பற்ற முடியாத அவமானத்தில் கிழக்கு உக்ரைனை நோக்கித் திரும்பின.

வெற்றிவிழாக் கொண்டாட்டங்களுக்கு முன் கிழக்கு உக்ரைனிலுள்ள டான்பாஸ் பகுதியையாவது பிடித்துவிட வேண்டும் என மும்முனை தாக்குதலில் ஈடுபட்டன ரஷ்யப்படைகள். ஆனால், அதுவும் நடக்காததால் தனது வெற்றிவிழா உரையில் பொய்களாக அவிழ்த்துவிட வேண்டிய நிலைக்கு ஆளானார் புடின்.

இந்நிலையில், கிழக்கு உக்ரைனிலும் ரஷ்யப் படைகள் தோல்வியை சந்தித்து வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

நேற்று முன்தினம் சமூக ஊடகம் ஒன்றில் வீடியோ ஒன்றைப் பதிவேற்றம் செய்த புடின் ஆதரவாளரான போர் ஊடகவியலாளர் , கிழக்கு உக்ரைனில் முன்னேற ரஷ்யப் படைகள் தடுமாறி வருவதை ஒப்புக்கொண்டுள்ளார்.

புடினுடைய 'சிறப்பு ஆபரேஷன்' வெட்கத்துக்குரிய வகையில் முடிவெடுக்க இயலாமல் திணறிவருவதாகவும், ரஷ்யப்படைகளால் உக்ரைன் படைகளை தோற்கடிக்க முடியவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இதற்கிடையில், கிழக்கு உக்ரைன் பகுதியில் ரஷ்யப் படைகளால் எந்த குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தையும் அடையமுடியவில்லை என்றும், அவர்கள் உக்ரைன் படைகளிடமிருந்து பலத்த எதிர்ப்பை சந்தித்து வருவதாகவும் அமெரிக்காவும் தெரிவித்துள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதிகளை வன்முறைக்கு பயன்படுத்திய மகிந்த மொட்டுக்கட்சியின் கோர முகம் அம்பலம்

## அருட்தந்தை சக்திவேல் காட்டம்



(நெளுக்குளம்)

**சிறைக்கைதிகளையும், கிராமிய ஏழைகளையும் ஒன்றுதிரட்டி பிரதமரின் வாசஸ்தலத்தினை அரச பயங்கரவாதத்தின் குகையாக்கி அவர்களால் முன்னெடுக்கப்பட்ட வன்முறை மொட்டுக் கட்சியினரதும், அவர்களின் தலைமையினதும் கொடூர முகத்தை காட்டி நிற்பதாக அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்துள்ளார்.**

அவரால் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,


ஜனநாயக ரீதியிலான போராட்டத்திற்கு ஆதரவாக செயற்பட்ட பொதுமக்களும் ஈற்றில் வன்முறையை கையில் எடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இத்தகைய நிலைக்கு மூலகர்த்தாவாக செயற்பட்ட மகிந்த ராஜபக்ஷவின் கையாட்களும் உடனடியாக கைது செய்யப்பட்டு நீதியின் முன் நிறுத்தப்படல் வேண்டும். எந்த நாட்டிற்குத் தப்பிச் சென்றாலும் அவர் கைது செய்யப்பட்டு நாட்டுக்கு அழைத்து வந்து நீதி முன்னால் நிறுத்தப்பட வேண்டும் என்பதே அனைத்து மக்களின் எதிர்பார்ப்பாகும்.

வன்முறையை தமதாக்கியவர்களும் தாக்குதலுக்கு உள்ளானவர்களும் தேசியக்கொடியுடன் நின்றனர். தெற்கில் தேசியக்கொடி என்பது வன்முறையின் அடையாளமாகியுள்ளது. இதுவே கடந்த கால அனுபவமுமாகும். இதனோடு பௌத்த கொடியை இணைத்து கொள்வதையும் நாம் கண்டுள்ளோம்.

தற்போதைய நாட்டின் நிலைமையை கருத்தில் கொண்டு எதிர்வரும் 18ஆம் திகதி வடகிழக்கில் நடைபெறும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு முற்போக்கு சக்திகளும்,

ஆட்சியாளர்களுக்கு எதிராக போராட்டம் செய்வோரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். ஆட்சியாளர்கள் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை எந்த வகையிலும் தடுப்பதற்கு நினைக்காது அமைதியான முறையில் அதனை நிகழ்த்துவதற்கு வழி ஏற்படுத்த வேண்டும். (4-299)

# வன்முறையை கண்டித்து முல்லை மருத்துவமனையில் போராட்டம்




(புனிக்கன்குளம்)

காலி முகத்திடல் போராட்டத்தில் ஏற்பட்ட அராஜக செயலை கண்டித்து முல்லைத்தீவு மாவட்ட பொது மருத்துவமனை மருத்துவர்கள், ஊழியர்கள் கவனயீர்ப்புப் போராட்டத்தினை முன்னெடுத்தனர்

இதன் போது அகிம்சை போராட்டத்தினை அராஜகமாக்கிய அரசே வெளியேறு, அரச பயங்கரவாதத்தினை எதிர்ப்போம் போன்ற அரசிற்கு எதிரான கோசங்களை தாங்கியவாறு கவனயீர்ப்பு நடவடிக்கையினை முன்னெடுத்தனர். (4-281)

# மின்சாரசபை ஊழியர் உட்பட மூவர் மீது மாமூலையில் தாக்குதல்

## ஒருவர் கைது

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மின்சார சபை ஊழியர் ஒருவர் உட்பட மூவர் மீது மாமூலை பகுதியில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாமூலை பகுதியில் கடந்த 8 ஆம் திகதி அன்று மாலை மின் பட்டியல் வழங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த மின்சார சபை ஊழியர் ஒருவர் மீது கிராமத்தை சேர்ந்த ஒருவர் மூர்க்கத்தனமான தாக்குதல் நடத்தியுள்ளார்.

இதனையடுத்து குறித்த தாக்குதலுக்குள்ளான மின்சார சபை ஊழியர் தன்னுடைய அலுவலகத்துக்கு தகவல் வழங்கி முல்லைத்தீவு முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்து முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதன் பின்னணியில் முல்லைத்தீவு மாவட்டத்தின் மின்சார சபை ஊழியர்கள் குறித்த ஊழியர் தாக்கப்பட்ட விடயம் தொடர்பில் பார்வையிடச் சென்ற போது குறித்த கிராமத்தைச் சேர்ந்தவர் மின்சார சபை ஊழியர் மீது தாக்குதல் நடத்தியவருடைய வீட்டினை அடையாளம் காட்டியுள்ளார்.

இந்நிலையில் மின்சார சபை ஊழியர்களுக்கு தாக்குதல் நடத்தியவரது வீட்டினைகாட்டிக் கொடுத்தவர்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது.

குறித்த விடயம் தொடர்பில் முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டு இருந்த நிலையில் நேற்று காலை ஒருவர் கைது செய்யபட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (4-281)

# கிளிநொச்சியில் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையே முரண்பாடு

## மூன்று பொலிஸார் மருத்துவமனையில்

(தருமபுரம்)

கிளிநொச்சி இராமநாதபுரம் பகுதியில் கர்ப்பிணி பெண் உட்பட்ட மாற்றுத்திறனாளி மீது பொலிஸார் கண் மூடித்தனமான தாக்குதல் மேற்கொண்டதையடுத்து பொலிஸார் மீது பொதுமக்கள் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

இத்தாக்குதலில் 3பொலிஸார் காயமடைந்துள்ளதுடன் மூவரும் கிளிநொச்சி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாக தருமபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வட்டக்கச்சி இராமநாதபுரம் பகுதியில் உள்ள பொலிஸ் நிலையத்திலிருந்து நேற்று மாலை முச்சக்கர வண்டியில் சென்ற பொலிஸார் குறித்த வீட்டில் கசிப்பு இருப்பதாக தெரிவித்து வீட்டில் வேலை செய்து கொண்டிருந்த இளைஞரை கைது செய்தனர். செய்து கைது செய்ததால் பொலிஸாருக்கும் வீட்டிலிருந்தவர்களுக்குமிடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

இதனையடுத்து பொலிஸார் குறித்த வீட்டி[illegible] கர்ப்பிணிப் பெண் மற்றும் நோய்வாய்ப்பட்ட மாற்றுத்திறனாளி கைது செய்யப்பட்ட இளைஞரின் தாயார் ஆகியோர் மீதும் பொலிஸார் தாக்குதல் மேற்கொண்டதாகவும் இதனால் கிராம மக்கள் ஒன்று கூடி பொலிஸார் மீதும் தாக்குதல் மேற்கொண்டனர். சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸ் உயரதிகாரிகள் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இச்சம்பவத்தில் பொலிசாரல் 912 லீற்றர் கசிப்பும் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் [illegible] எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (4-316)

# யாழ்.பல்கலை கிளிநொச்சி வளாகத்திலும் போராட்டம்



(முறிகண்டி)

தென்னிலங்கை சம்பவத்தை கண்டித்து யாழ்.பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தில் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாலை பல்கலைக்கழக வளாகத்தில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் A9 வீதி வரை முன்னெடுக்கப்பட்டது. (4-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடைக்கால அரசமைக்க எம்முடன் இணையுங்கள்

## ஜே.வி.பி. க்கு அழைப்பு

(கொழும்பு)

**நாடு தற்போது எதிர்நோக்கும் அரசியல், பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வாக அனைத்துக் கட்சி இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்கு தம்மோடு கைகோர்க்குமாறு ஜே.வி.பி. க்கு சுதந்திரக் கட்சி அழைப்பு விடுத்துள்ளது.**

சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கும்போதே அக்கட்சியின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் மைத்திரிபால சிறிசேன இந்த அழைப்பை விடுத்தார். இந்தத் தருணத்தில் தேர்தலுக்குச் செல்வது சாத்தியமற்றது என்பதால், இடைக்கால அரசை அமைக்க ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என அவர், ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்திக்கு அழைப்பு விடுத்தார்.



ஒன்றாக அமர்ந்து, தற்போது இருக்கும் மோசமான நிலையை சரிசெய்து நாட்டை மீட்டெடுத்த பின்னர் எப்போது என்றாலும் தேர்தலை நடத்தலாம் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டார். (நி)

# வெளிநாடு செல்வோர் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

இந்த வருடத்தில் இதுவரையில் 100,000 இற்கும் அதிக மானோர் வெளிநாட்டு வேலைக்காக இலங்கையை விட்டு வெளியேறியுள்ளதாக உரிமம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனம் தெரிவித்துள்ளது.

அவர்களில் பெரும்பாலானோர் மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலைக்குச் சென்றுள்ளனர் என எதிர்பார்க்கப்படுவதாக அதன் செயலாளர் எம்.எப்.எம்.அர்ஷாத் தெரிவித்துள்ளார்.

இலங்கை மத்திய வங்கியின் 2021 வருடாந்த அறிக்கையின் பிரகாரம், கடந்த வருடம் வேலைக்காக வெளிநாடு சென்ற இலங்கையர்களின் எண்ணிக்கை 121,795 ஆகும். இது முந்தைய ஆண்டை விட 127 சதவீதம் அதிகமாகும்.

அத்துடன், இவ்வருடம் வேலைவாய்ப்புக்காக வெளிநாடு செல்லும் இலங்கையர்களின் எண்ணிக்கை 300,000ஐ தாண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. (நி)

# பொலிஸ்மா அதிபர், இராணுவத்தளபதிக்கு மனித உரிமைகள் ஆணைக்குழு அழைப்பு

(கொழும்பு)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு பொலிஸ்மா அதிபர் மற்றும் இராணுவத்தளபதிக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

சட்டம் ஒழுங்கை பேணத் தவறியதற்கான காரணத்தை விளக்குமாறு கோரியே மனித உரிமைகள் ஆணைக்குழு அவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது. அதன்படி இராணுவத் தளபதி சவேந்திர சில்வா மற்றும் பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்ரமரத்னவை நாளை முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (நி)

# ஜனாதிபதியின் கீழ் இடைக்கால அரசு ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்கின்றது ஐ.ம.ச

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கீழ் அமையும் இடைக்கால அரசாங்கத்தை ஏற்றுக் கொள்ளப்போவதில்லை என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

ஆகவே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டும் என அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

மேலும் ஜனாதிபதி தலைமையில் இடைக்கால அரசாங்கத்தை அமைப்பது தொடர்பான பேச்சுவார்த்தையில் ஐக்கிய மக்கள் சக்தி இணையாது என்றும் அவர் தெரிவித்தார்.

இடைக்கால அரசாங்கத்தை அமைக்கும் வகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் தனது பதவியை இராஜினாமா செய்தார்.

இதேநேரம்சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்க பதவிகளை ஏற்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசியல் கட்சிகளுக்கு அழைப்பு விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# மத்திய வங்கி ஆளுநரை சந்தித்த சஜித்

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்கவுடன் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தற்போதைய தேசிய நெருக்கடி தொடர்பில் கலந்துரையாடியுள்ளார்.

இந்த கலந்துரையாடலில் திறைசேரியின் செயலாளர் கே.எம்.எம்.சிறிவர்தனவும் கலந்துகொண்டதாக அவர் தெரிவித்தார்.

"இந்த நெருக்கடியை சமாளிக்க நாங்கள் எப்போதும் எங்கள் தளராத ஆதரவை வழங்குகிறோம். மத்திய வங்கி ஆளுநர் மற்றும் கருவூல செயலாளருடன் இறுதியாக ஒரு பயனுள்ள சந்திப்பை நடத்துவது நல்லது. எந்தவொரு நெருக்கடியைத் தூண்டுபவர்களுடனும் பணிபுரியாமல் இருக்கும் வரை எந்தவொரு பொறுப்பையும் நாங்கள் ஏற்றுக்கொள்வோம்." என்று அவர் தனது டுவிட்டர் தளத்தில் இதுகுறித்து கருத்து தெரிவித்துள்ளார். (நி)



# அரசாங்கம் ஆட்சித் திறனை இழந்து விட்டது

## பொதுமக்களின் விருப்பத்திற்கு மதிப்பளிக்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

பொதுமக்கள் விருப்பத்துக்கு மதிப்பளிக்குமாறு இலங்கை மருத்துவ சங்கம் அரசாங்கத்திடம் கோரியுள்ளது.

நாட்டை அமைதியான முறையில் ஆட்சி செய்யும் திறனை அரசாங்கம் இழந்து விட்டதாக அந்தச் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

இந்நிலையில், தீவிரமான சீர்திருத்த நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், எதிர்வரும் நாட்களில் மேலும் வன்முறைகள் ஏற்பட வாய்ப்புள்ளதாக அந்தச் சங்கம் எச்சரித்துள்ளது.

இது போன்ற வன்முறைகள் தொடர்ந்தால், அது, சுகாதாரத்துறையை மேலும் சீரழிக்கும் என்றும் இலங்கை மருத்துவ சங்கம் வலியுறுத்தியுள்ளது. (நி)

# வீதிகளில் சோதனையிடும் பொதுமக்கள்



(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் மக்கள் வீதிகளில் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

கொழும்பில் "மைனா கோ கம" மற்றும் "கோட்டா கோ கம" ஆர்ப்பாட்டங்கள் மீது நேற்று முன்தினம் பொதுஜன பெரமுனவின் ஆதரவாளர்கள் தாக்குதலை மேற்கொண்டனர்.

கொழும்பு காலிமுகத்திடலில் இடம்பெற்ற அமைதியான மக்கள் ஆர்ப்பாட்டத்திற்கு தாக்குதலை மேற்கொண்ட நிலையில், நாடளாவிய ரீதியில் வன்முறைகள் தோற்றம் பெற்றது.

இதையடுத்து மக்கள் பொதுஜனபெரமுனவின் அரசியல்வாதிகளின் வீடுகள் மற்றும் சொத்துக்களை தாக்கி அழித்ததுடன் அவற்றுக்கு தீ வைத்து அழித்தனர்.

இந்நிலையில் குறித்த அரசியல்வாதிகளில் எவராவது நாட்டைவிட்டு தப்பிச்சென்றுவிடாமல் தடுக்க பொதுமக்கள் வீதிகளில் இறங்கி சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அதிவேக வீதி மற்றும் கட்டுநாயக்க விமான நிலையத்திற்குச் செல்லும் வீதிகள் போன்றவற்றில் மக்கள் இவ்வாறு சோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி)

# 'அக்கிரமத்தில் ஆட்சி செய்யும் அரசே மக்களின் அபிப்பிராயத்திற்கு தலைவணங்கு'

## திருமலை பொது மருத்துவமனை ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்

(திருமலை)

திருகோணமலை பொது மருத்துவமனையின் சுகாதார பிரிவினர் அரசாங்கத்திற்கெதிராக மருத்துவமனை நுழைவாயிலின் முன்னால் நேற்று செவ்வாய்கிழமை கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சுகாதாரப் பிரிவினர் "அக்கிரமத்தில் ஆட்சி செய்யும் அரசே மக்களின் அபிப்பிராயத்திற்கு தலை வணங்கு" போன்ற வாசகங்கள் உள்ளிட்ட வாசகங்களை ஏந்தி தங்களது எதிர்ப்பினை வெளிப்படுத்தினர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

## பெயர் வேண்டுமா?



(நேற்றைய தொடர்ச்சி)

அவன் வருவான் எனப் பல நாட்களாக எதிர் பார்த்த கந்தப்பன் அவனைக் கண்டும் காணாதவன் போல "பெயர் விற்கிறேன். விலை மதிப்புள்ள பெயர்" என்று உரக்கக் கூவினான். காளியப்பன் அவனிடம் போய் "என்னை ஏமாற்றி விட்டாயே. இரண்டு பெயர்களே விற்பனைக்கு இருப்பதாகச் சொன்னாயே. இப்போது ஏது பெயர்கள்?" என்று கேட்டான். கந்தப்பனும் "நீ தான் என்னை ஏமாற்றினாய். இரண்டு பெயர்களை என்னிடமிருந்து வாங்கிக் கொண்டாய். கிடைப்பதில் பாதியைக் கொடுப்பதாகவும் கூறினாய். ஆனால்எதுவுமே கொடுக்கவில்லையே" என்றான். காளியப்பனும் "போனது போகட்டும். இன்னொரு பெயரைச் சொல். போன முறை மன்னர் காணிக்கையாகக் கொடுத்த இரண்டு இலட்சத்திற்கும் மேல் மதிப்புள்ள பொருட்களை எல்லாம். கடவுள் சாட்சியாக உனக்குக் கொடுக்கிறேன்" என்றான்.

கந்தப்பனும் "சரி. நீ உன்னை பலவீரன் என்ற மகாவீரன் என்று சொல்லிக் கொண்டு மன்னர் முன் போ. வேஷம் கூடப் போட வேண்டாம். ஏனென்றால் மன்னர் அவனைப் பார்த்ததுகூட இல்லை. பெயரைக் கேட்டாலே நடுநடுங்கி உன்னை நண்பனாக்கிக் கொண்டு ஏராளமாகப் பணம் தருவார்" என்றான்.

காளியப்பனும் மன்னனின் தர்பாருக்குப் போய் "அரசே! நான் தான் பலவீரன்" என்று உரக்கக் கூறி அட்டகாசமாய்ச் சிரித்தான்.

மன்னன் அமைச்சரைப் பார்த்தார். அமைச்சரும் "பலவீரன் துரோகி. நம் படைபலம் பற்றி எதிரிக்குத் தகவல் கொடுத்தவன். ஆனால் அவன் கொல்லப்பட்டான். இவன் யார் என எனக்குத் தெரியும்" எனத் தாழ்ந்த குரலில் கூறினார். பிறகு அமைச்சர் "அடே! நீயா பலவீரன்? நான் அவனைப் பார்த்திருக்கிறேன். நீ யாரென்றும் எனக்குத் தெரியும். நீ பக்காத் திருடன் காளி. இவ்வளவு நாளாகப் பல திருட்டுகளைச் செய்து விட்டு தலைமறைவாய் இருந்தாய். இன்று அகப்பட்டுக் கொண்டாய்" என்று கூறி வீரர்களுக்குச் சைகை செய்தார். மறு நிமிடமே வீரர்கள் சட்டெனப் பாய்ந்து காளியப்பனைப் பிடித்துக் கொண்டார்கள்.

காளியப்பன் நடுநடுங்கி "ஐயோ! நொண்டி கந்தப்பன் இப்படியா என்னை மாட்டி விட்டான்?" என்று அலறினான். அப்போது அமைச்சர் "யார் அந்தக் கந்தப்பன்?" என்று கேட்கவே அப்போது தர்பாரில் இருந்த கந்தப்பன் தடியை ஊன்றியவாறே எழுந்து வந்து "நான்தான் அரசே! தங்களது முன்னாள் படை வீரன். போரில் காயமுற்றுக் காலை இழந்தவன்" என்று சொல்லி காளியப்பன் தன்னை ஏமாற்றியதையும் விபரமாகக் கூறினான்.

மன்னனும் "அடடா! உன்னை சரியாக கவனிக்கவில்லை. நீ இந்தத் திருடனைப் பிடித்துக் கொடுத்தாய். அதற்காக உனக்கு இலட்சம் வராகன் பரிசளிப்பதோடு மானியமாக நிலமும் அளிக்கிறேன்" என்றான்.

கந்தப்பனுக்கு பரிசு கிடைத்தது. காளியப்பனுக்கோ சிறை தண்டனை கிடைத்ததோடு அவனது சொத்தும் பணமும் பறிமுதல் செய்யப்பட்டது.

(முற்றும்)

# கம்பராமாயணம்

## கிட்கிந்தா காண்டம்




"இராவணனைக் கொல்வதற்கு உறுதுணை தேடி இருக்கலாம்; சிங்கத்தைத் துணையாகக் கொள்வதை விடுத்துச் சிறு முயலை நம்பிச் செயற்பட்டு இருக்கிறாய்; "உன்னிடம் அறமும் இல்லை; அறிவும் இல்லை" என்று தான் சொல்ல வேண்டி இருக்கிறது" என்று இராமனிடம் கூறினான்.

"நீ சொல்வது போல் என் தேவைக்காக உன்னைக் கொன்றேன் என்று சொல்வதை ஏற்க முடியாது; தீமையைக் கண்டவிடத்து அதை ஒழிப்பது அரசு நீதியாகும்; நீ எந்தத் தவறும் செய்யாத உன் தம்பியை அலற வைத்தாய்; துரத்தித் துரத்தி அடித்தாய்; தீர விசாரித்து உண்மை காணாது அவனைக் கொல்வதிலேயேநாட்டம் கொண்டாய்; தம்பியை அழிக்க நினைத்திடும் நீ, எனக்குச் சகோதர பாசத்தைப் பற்றிய பாடம் கற்றுத் தருகிறாய். "தம்பியின் தாரத்தைத் தங்கையாக மதிக்க வேண்டிய நீ, அவளைத் துணைவியாக ஆக்கிக் கொண்டாய்; பிறர்மனைவியை விரும்பும் அற்பத்தனம் உன்னிடம் அமைந்துள்ளது; நீ உயிர் வாழத் தக்கவன் அல்லன், பற்களைக் குத்தித் தூய்மைப்படுத்தச் சிறு துரும்பு போதும் ;உலக்கை தேவை இல்லை; இராவணனை அழிக்க எனக்கு உன் தம்பி போதும்; நீ தேவை இல்லை" என்று கூறினான்.

"ஒழுக்கம் என்பது மானிடர்க்கு விதிக்கப்பட்ட வரையறை, நாங்கள் விலங்குகள்; விலங்குகளுக்குள் கணவன்-மனைவி என்ற உரிமை கொண்டாட முடியாது. "கற்பு" என்ற கட்டுத்திட்டத் துக்கு இங்கே இடமே கிடையாது; மேல் மட்டத்தில் நீங்கள் வலிய அமைத்துக் கொண்ட கட்டுப்பாடு அது; எங்களுக்கு இருக்கிற ஒரே வாய்ப்பு விரும்பியவாறு வாழலாம் என்பதே".

"வல்லவன் எதையும் செய்யலாம்; வலிமைதான் நியாய ஒழுங்குக்கு வரையறை; இது எங்களிடை நிலவும் விதி; எங்களிடம் அறநெறியை எதிர்பார்க்க முடியாது; நாங்கள் இயற்கையின் விதிகளுக்கு உட்பட்டு வாழ்பவர்கள்; மனிதருக்குச் சொல்லப்பட்ட அளவு கோல்களை வைத்து, எங்களை அளப்பதில் நியாயம் இல்லை" என்று வாலி கூறினான்.

"மிருகம், மனிதன், என்பது உடலைப் பற்றியது அன்று; மனத்தைப் பற்றியது; மனிதனுக்குரிய அறிவும் ஆற்றலும் சிந்தனையும் உன்னிடம் உள்ளன; விலங்கு என்று சொல்லித் தப்பித்துக் கொள்ள முடியாது" என்று இராமன் அவனைத் திருத்தினான்; வாலி மனம் மாறினான் னான்.அதற்குப் பின் "இராமன் தவறு செய்ய மாட்டான்; நீரில் நெருப்புத் தோன்றாது; தவறு தன்னுடையதுதான் என்று உணர்ந்து அடங்கி விட்டான் வாலி.

"தவறு செய்திருந்தால் என்னை மன்னித்து விடு" என்று பெருமிதத்தோடு கூறினான்; "நான் கேட்கும் வரம் ஒன்று உள்ளது; அதைத் தர வேண்டும்" என்று கேட்டான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ செய்யும் பாவமே உன்னைக் காட்டிக் கொடுத்துவிடும்.
– பைபிள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தன் வினை தன்னைச் சுடும் ஓட்டப்பம் வீட்டைச் சுடும்

*முன்னையிட்ட தீ முப்புரத்திலே பின்னையிட்ட தீ தென்னிலங்கையிலே...*

என்று பாடினார் பட்டினத்தடிகள்.

பின்னையிட்ட தீ இலங்கையில் என்று பட்டினத்தடிகள் குறிப்பிடவில்லை.

மாறாக, தென்னிலங்கை என்று எல்லை நிர்ணயித்துக் குறிப்பிட்டுள்ளார்.

ஆம், அசோகவனத்தில் சீதையைச் சிறை வைத்திருந்ததன் காரணமாக இலங்கை மீது இராமசேனை போர் புரிந்தது.

அந்நேரத்தில் அனுமன் தன் வாலில் தீப்பந்தைக் கட்டி தென்னிலங்கையை எரியூட்டினான்.

அதனால் தென்னிலங்கை எரிந்து சாம்பலாயிற்று.

இந்தச் சம்பவத்தை, தன் தாயின் சிதைக்கு அக்னி மூட்டும்போது பட்டினத்தடிகள் நினைவுபடுத்திப் பாடுகின்றார்.

உலகில் தீப்பற்றி எரிந்த தேசங்கள், நாடுகள், அரண்மனைகள் ஏராளம்.

குறிப்பாக கண்ணகித் தாய் மதுரை மாநகரை எரியூட்டியமை ஒரு பெரும் வரலாறு.

ஆனால் பட்டினத்தடிகள் அதனை விடுத்து சிவனால் எரிக்கப்பட்ட முப்புரத்தையும் அனுமனால் எரியூட்டப்பட்ட தென்னிலங்கையையும் மட்டும் தன் பாடலில் சேர்த்துக் கொண்டார் எனில்,

அதற்குள் இருக்கக்கூடிய செய்தி என்ன என்பது பற்றி நாம் ஆராய வேண்டும்.

அந்த ஆய்வின் அடிப்படையில், பின்னையிட்ட தென்னிலங்கைத் தீ இன்னமும் தொடர்வதைக் காண முடிகிறது.

ஆம், காலத்துக்குக் காலம் அதிலும் ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில் தென்னிலங்கை எரிந்து கொண்டு இருக்கிறது.

உண்மை, நேற்றும் நேற்று முன்தினமும் தென்பகுதியில் மந்திரிகளினதும் அரச பிரதானிகளினதும் வீடுகள் எரியூட்டப்பட்டன.

வீடுகள் மட்டுமன்றி வாகனங்கள், கட்சி அலுவலகங்கள் என்பனவும் தீக்கு இரையாகின.

இவற்றையெல்லாம் பார்க்கும்போது பின்னையிட்ட தீ தென்னிலங்கையிலே என்ற பட்டினத்தடிகளின் பாடல் நினைவுக்கு வந்தது.

இந்த நினைவோடு பட்டினத்தடிகள் கூறிய **தன்வினை தன்னைச்சுடும். ஓட்டப்பம் வீட்டைச் சுடும்** என்ற மெய்யியல் தத்துவமும் சிந்தனையைத் தட்ட, அம்பாந்தோட்டையில் மகிந்த ராஜபக்ஷவின் பூர்வீக வீடு எரியூட்டப்பட்டதான செய்தி நம் செவிகளைத் தொடுகின்றன.

அதோ! அன்று மாவீரர்களின் கல்லறைகளை இடித்து அழித்த ஈனச் செயல் இன்று மகிந்த ராஜபக்ஷவின் தந்தை, தாயின் நினைவுத்தூபிகளையும் உருவச் சிலைகளையும் இடித்து அழிப்பதாக அறிந்தபோது, தன்வினை தன்னைச் சுடும் ஓட்டப்பம் வீட்டை மட்டுமல்ல எதை எதையெல்லாம் சுடவேண்டுமோ அதையதையெல்லாம் சுடும் என்ற மெய்மையை உணர முடிகிறது.

# அரசியலமைப்பு முறைமையை நிலைநாட்ட இந்திய இராணுவம் அனுப்பி வைக்கப்படவேண்டும்

## சுப்ரமணியன் சுவாமி தெரிவிப்பு

(கொழும்பு)

அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது நடத்தப்பட்ட வன்முறைத் தாக்குதல்களை அடுத்து நாடளாவிய ரீதியில் அமைதியின்மை நிலையொன்று தோற்றம் பெற்றிருக்கும் நிலையில், அரசியலமைப்பு முறைமையை நிலைநாட்டுவதற்கு இந்திய இராணுவம் அனுப்பிவைக்கப்படவேண்டும் என்று பாரதிய ஜனதா கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும் மாநிலங்களவை உறுப்பினருமான சுப்ரமணியன் சுவாமி தெரிவித்துள்ளார்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவாக நேற்று முன்தினம் அலரி மாளிகையில் ஒன்று திரண்ட குழுவினர் அலரி மாளிகைக்கு முன்பாக காலி வீதியில் நிர்மாணிக்கப்பட்டிருந்த "மைனா கோ கம" கூடாரங்களை இடித்து, அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களையும் கடுமையாகத் தாக்கினர்.

அதனைத்தொடர்ந்து காலி வீதியின் ஊடாக காலிமுகத்திடலில் அமைக்கப்பட்டிருந்த "கோட்டா கோ கம"விற்குச் சென்று அங்கு நிர்மாணிக்கப்பட்டிருந்த கூடாரங்களை எரித்து, போராட்டக்காரர்கள்மீது தாக்குதல் நடத்தினர். அதனையடுத்து நாடளாவிய ரீதியில் வன்முறைகள் வெடித்து அமைதியற்ற நிலையொன்று தோற்றம் பெற்றுள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில் தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் செய்திருக்கும் பதிவொன்றிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டிருக்கின்றார்.

அரசியலமைப்பு முறைமையை நிலைநாட்டுவதற்கு இந்திய இராணுவம் அனுப்பிவைக்கப்படவேண்டும். தற்போதைய சூழ்நிலையில் இந்தியாவிற்கு எதிரான வெளிநாட்டு சக்திகள் மக்களின் கோபத்தைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள முயற்சிக்கின்றன. இது இந்தியாவின் தேசிய பாதுகாப்பில் பாதிப்பை ஏற்படுத்தும் என்று குறிப்பிட்டுள்ளார்.

அவரது அந்த டுவிட்டர் பதிவிற்குக் கீழ் பின்னூட்டங்களை வெளியிட்டிருக்கும் இலங்கையர்கள், இந்திய இராணுவத்தை அனுப்பிவைக்க வேண்டும் என்ற அவரது கருத்தைக் கடுமையாகக் கண்டனம் செய்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

### முல்லை செம்மலை கடலில்

## நீராடச் சென்ற ஒரே குடும்பத்தை சேர்ந்த 3 இளைஞர்கள் மாயம்

முல்லைத்தீவு செம்மலை கடலில் நீராடச் சென்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று சகோதரர்கள் கடல் அலையில் இழுத்துச் செல்லப்பட்டு காணாமல் போயுள்ளனர்.

அளம்பில் கிராமத்தைச் சேர்ந்த இளைஞர்கள் குழு ஒன்று செம்மலை கடலில் நீராடுவதற்காக வருகைதந்த நிலையில் கடல் வழமைக்கு மாறாக கொந்தளிப்பாக காணப்பட்ட நிலையில் அதனையும் பொருட்படுத்தாது கடல் நீச்சலில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று சகோதரர்களில் ஒருவர் அலையில் இழுத்துச் செல்லப்பட்ட நிலையில் அவரை காப்பாற்றும் முயற்சியில் ஏனைய இரு சகோதர்களும் ஈடுபட்டுள்ளபோது அவர்களும் அலையில் அடித்துச் செல்லப்பட்டு காணாமல் போயுள்ளனர்.

அளம்பிலைச் சேர்ந்த பத்மநாதன் விஸ்வநாதன் (29), பத்மநாதன் விஜித் (26), பத்மநாதன் விழித்திரன் (22) ஆகிய ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்களே அலையில் அடித்துச் செல்லப்பட்டு காணாமல் போயுள்ளனர்.

இந்தச்சம்பவத்தை அடுத்து பெருமளவான மக்கள் செம்மலை கடற்கரை பகுதியில் குவிந்துள்ளதோடு பொலிஸார் விசாரணைகளையும் ஆரம்பித்துள்ளனர்.

தாழமுக்கம் காரணமாக கடல் மிகவும் கொந்தளிப்பாக காணப்படுவதால் தேடுதல் முயற்சிகள் எவையும்இதுவரை முன்னெடுக்கப்படவில்லை. (ம-281)

## 58 சிறைக் கைதிகள் காணாமல்போயுள்ளனர்

### சிறைச்சாலைகள் ஆணையாளர் தெரிவிப்பு

வட்டரெக்க சிறைச்சாலையை சேர்ந்த 58 கைதிகள் காணாமல் போயுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய தெரிவித்துள்ளார்.

இவர்கள் கொழும்பில் பணி புரிந்துவிட்டு சிறைச்சாலைக்கு வழமையாக திரும்பி வருவதாகவும் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இவ்வாறு பணிக்குச்சென்ற கைதிகள் மீண்டும் சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்டபோது அவர்கள் மாலபே மற்றும் தலாஹேன பிரதேசங்களில் ஆர்ப்பாட்டக்காரர்களிடம் சிக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம)

## வவுனியாவில் வீதியில் டயர் எரித்த இருவர் கைதாகி விடுவிப்பு

வவுனியா கொரவப் பொத்தான வீதியில் ரம்பைக்குளம் பகுதியில் வீதியில் டயர் எரித்து போராட்டம் செய்த இருவர் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று மாலை ஐக்கிய தேசியக்கட்சியின் ஆதரவாளரொருவரும் அவருடன் சிறுமி உட்பட மேலும் ஒருவரும் இணைந்து வீதியோரத்தில் டயரை எரித்ததுடன் பதாகைகள் மற்றும் தேசியக்கொடியை ஏந்தி அரசாங்கத்திற்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது அங்கு வருகை தந்த வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எரிக்கப்பட்ட டயரை வீதியின் ஓரமாக அகற்றுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டதுடன் அவர்கள் ஏந்தியிருந்த பதாகைகள் மற்றும் தேசியக்கொடியை பறித்தெடுத்தமை குறிப்பிடத்தக்கது.(ம)

## ஸ்ரீ இராமகிருஷ்ணரின் அமுதமொழிகள்



### குருவும் சீடரும்

குடிசையின் அருகில் வந்ததும் குருதேவர் ம-வைப் பார்த்து, இதோ பார்! விவசாயிகள் காளை மாடு வாங்க சந்தைக்குப் போவார்கள். உழைக்கின்ற காளை எது மந்தமான காளை எது என்று அவர்களுக்கு நன்றாகத் தெரியும். வாலுக்குக் கீழே கையை வைப்பார்கள். சில காளைகள் கை பட்டாலும் அப்படியே படுத்துக் கிடக்கும். அவற்றை வாங்க மாட்டார்கள். வாலுக்கு அடியில் கை வைத்ததும் எந்தக் காளை தடார் படாரென்று துள்ளிக் குதிக்கின்றதோ அதையே விரும்புவார்கள். நரேந்திரன் அப்படிப்பட்ட காளையைப் போன்றவன், துடிப்பு நிறைந்தவன் என்றார்.

இதனைக் கூறிவிட்டுச் சிரித்தார் குருதேவர். பிறகு தொடர்ந்தார். இன்னும் சிலர் இருக்கிறார்கள். நனைந்த அவல் போன்றவர்கள். துடிப்பில்லை, துணிச்சல் இல்லை, உள்ளே எதுவும் இல்லை.

சந்தியாவேளை ஆயிற்று. குருதேவர் இறை எண்ணங்களில் மூழ்க ஆரம்பித்தார். ம-விடம் நீ நரேந்திரனிடம் பேசிப்பார். அவன் எத்தகையவன் என்பதை எனக்குச் சொல் என்றார்.

(தொடரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலப்பு தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணய அறிக்கை-ஒரு பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 63

| அட்டவணை- பொலன்னறுவை மாவட்ட தேர்தல்தொகுதிகளும் சனத்தொகையும் | | | | | |
|---|---|---|---|---|---|
| தேர்தல்தோகுதி | சிங்களம் | தமிழ் | முஸ்லீம் | மற்றவை | மொத்தம் |
| ஹிங்குரக்கொடை | 80169 | 210 | 629 | 31 | 81039 |
| மெதிரிகிரிய | 82309 | 158 | 18 | 31 | 82516 |
| வெலிகந்த | 60251 | 3748 | 16407 | 40 | 80446 |
| திம்புலாகல | 77133 | 2431 | 81 | 16 | 79661 |
| தமண்கடுவ | 68335 | 915 | 13042 | 134 | 82426 |
| மொத்தம் | 368197 | 7462 | 30177 | 252 | 406088 |




### ஊவா மாகாணம் பற்றிய தகவல்கள்

பதுளை மாவட்டத்திற்கு உரித்தான 2,861 சதுர கிலோ மீற்றர் பரப்பையும் மொனராகலை மாவட்டத்திற்கு உரித்தான 5,639 சதுர கிலோ மீற்றர் பரப்பையும் உள்ளடக்கிய ஊவா மாகாணம் வடக்கு மற்றும் கிழக்கு திசையால் கிழக்கு மாகாணத்தையும் தெற்கு திசையால் தென் மாகாணத்தையும் மேற்கு திசையால் மத்திய மற்றும் சப்பிரகமுவ மாகாணங்களையும் எல்லைகளாகக் கொண்டு அமைந்துள்ளது.

இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் 13% ஐ இந்த மாகாணம் கொண்டுள்ளது. மாகாணத்தின் நிலப்பரப்பு மற்றும் உள்ளக நீர்ப்பரப்பு முறையே 8.335 மற்றும் 165 சதுர கிலோ மீற்றரைக் கொண்டுள்ளது.

2010 ஆம் ஆண்டில் மாகாணத்தின் வனப் பிரதேசம் 2.935 சதுர கிலோ மீற்றரைக் கொண்டு காணப்பட்டது. அதாவது மொத்த நிலப்பரப்பில் 34.5% என கணக்கிடப்பட்டுள்ளது. மாகாணத்தின் தலைநகரம் பதுளை ஆகும். மாகாணத்தின் வீதிகளின் நீளம் 2016 ஆம்

**பதுளை மாவட்டத்திற்கு உரித்தான 2,861 சதுர கிலோ மீற்றர் பரப்பையும் மொனராகலை மாவட்டத்திற்கு உரித்தான 5,639 சதுர கிலோ மீற்றர் பரப்பையும் உள்ளடக்கிய ஊவா மாகாணம் வடக்கு மற்றும் கிழக்கு திசை யால் கிழக்கு மாகாணத்தையும் தெற்கு திசையால் தென் மாகாணத்தையும் மேற்கு திசையால் மத்திய மற்றும் சப்பிரகமுவ மாகாணங்களையும் எல்லைகளாகக் கொண்டு அமைந்துள் ளது.**

ஆண்டளவில் 3,535 கிலோ மீற்றராக காணப்பட்டது.

**இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் 13% ஐ ஊவா மாகாணம் கொண்டுள் ளது. மாகாணத்தின் நிலப்பரப்பு மற் றும் உள்ளக நீர்ப்பரப்பு முறையே 8,335 மற் றும் 165 சதுர கிலோ மீற் றரைக் கொண் டுள்ளது. 2010 ஆம் ஆண்டில் மாகா ணத்தின் வனப் பிரதேசம் 2,935 சதுர கிலோ மீற்றரைக் கொண்டு காணப்பட்டது.**

ஊவா மாகாணம் 2015 ஆம் ஆண்டு இலங்கையின் மொத்த பொருளாதார அபிவிருத்தியில் 5% பங்களிப்பைச் செலுத்தியது. அத்தோடு சேவைத் துறையில் 5% கைத்தொழிற்துறையில் 4% விவசாயத்துறையில் 11% பங்களிப்புச் செலுத்தியுள்ளது.ஊவா மாகாணத்தின் பொருளாதார வருமானம் முக்கியமாக சேவைத் துறையில் இருந்தும் (60%) அதைத்தொடர்ந்து

| அட்டவணை 4.1: பால்நிலைக்கு அமைய சனத்தொகை மாற்றம் - ஊவா மாகாணம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பிரதேசம் | மொத்த சனத்தொகை | | ஆண் | | பெண் | |
| | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| பதுளை | 815,405 | 100 | 391,948 | 48.1 | 423,457 | 51.9 |
| மொணராகலை | 451,058 | 100 | 224,168 | 49.7 | 226,890 | 50.3 |
| ஊவா | 1,266,463 | 100 | 616,116 | 48.6 | 650,347 | 51.4 |
| இலங்கை | 20,359,439 | 100 | 9,856,634 | 48.4 | 10,502,805 | 51.6 |

கைத்தொழிற் துறையில் இருந்தும் (23%) மிகுதி விவசாயத் துறையில் இருந்தும் (17%) கிடைக்கப்பெறுகின்றன. 2016 ஆம் ஆண்டில் ஊவா மாகாணத்தின் வேலை வாய்ப்பு முக்கியமாக விவசாயத் துறையில் (54%) அதைத்தொடர்ந்து சேவைத் துறையில் (34%) மற்றும் கைத்தொழிற் துறையில் (12%) ஆகும்.

சனத்தொகை மற்றும் வீடுகள் கணக்கெடுப்பின் (2012) பிரகாரம் சனத்தொகையின் விஞ்ஞான ரீதியான பிரிவுகளான பிரதேச நிர்வாகம், உள்ளூராட்சி மற்றும் தேர்தல் அதிகாரப் பிரதேசங்கள் தொடர்பாக மாகாணத்திற்கும் அதன் மாவட்டங்களுக்கும் ஏற்புடைய தகவல்கள் அடுத்துவரும் பகுதிகளில் விபரிக்கப்பட்டுள்ளன.

### ஊவா மாகாணம் மொத்த சனத் தொகை, சனத்தொகை அடர்த்தி மற்றும் எழுத்தறிவு -2012

சனத்தொகை மற்றும் வீடுகள் கணக்கெடுப்புக்கு (2012) அமைய நாட்டின் சனத்தொகையில் 6.2% அதாவது 1.266.463 பேர் ஊவா மாகாணத்தில் வசிக்கின்றனர். மாகாண சனத்தொகையில் 64.4% அதாவது 815.405 பேர் பதுளை மாவட்டத்திலும் 35.6% அதாவது 451.058 பேர் மொனராகலை மாவட்டத்திலும் வசிக்கின்றனர்.

மாகாணத்தின் சனத்தொகை அடர்த்தி ஒரு சதுர கிலோ மீற்றருக்கு 152 ஆகும். மொனராகலை மாவட்டத்தில் ஒரு சதுர கிலோ மீற்றருக்கு 82 பேராகவும் பதுளை மாவட்டத்தில் ஒரு சதுர கிலோ மீற்றருக்கு 288 பேராகவும் சனத்தொகை அடர்த்தி காணப்படுகின்றது. மாகாணத்தில் 10 வயதுக்கு மேற்பட்டவர்களின் எழுத்தறிவு (அர்த்தமுள்ள சிறு குறிப்பொன்றை எழுத முடியுமான ஆட்களின் எண்ணிக்கை) 92.2 % ஆகும்.

### ஊவா மாகாணம் பால்நிலைக்கு அமைய சனத்தொகை மாறுபட்டுள்ள விதம் -2012

மாகாணத்தில், மாவட்டத்தில் மற்றும் நாட்டில் பால்நிலைக்கு அமைய சனத்தெகை மாறுபட்டிருப்பது தொடர்பாக அட்டவணை 4.1 இல் காட்டப்பட்டுள்ளது. நாட்டின் ஏனைய மாவட்டங்களைப் போன்று இவ்விரு மாவட் டங்களிலும் பெண்கள் சனத்தொகை ஆண்கள் சனத் தொகையை மிஞ்சியிருப்பதை அட்ட வணை 4.1 மூலம் அவதானிக்க முடியும்.

### ஊவா மாகாணம் சனத்தொகைப்பிரிவுகள் அடிப்படையில்வேறுபட்டுள்ள விதம்-2012

சனத்தொகைப்பிரிவுகள் அடிப்படையில் வேறுபட்டுள்ள விதம் அட்டவணை 4.2 இல் தரப்பட்டுள்ளது.ஊவா மாகாண சனத்தொகையில் பெரும்பான்மை மக்கள் கிராமப் புறத்தில் வாழ்கின்றனர். அது81.7% ஆகும். நகர்ப்புற சனத்தொகை 5.5% ஆகும். மொனராகலை மாவட்டத்தில் கிராமப்புறத்தில் வாழும் மக்கள் தொகை மிக அதிகமானது (98.1%). இங்கு நகர்ப்புற சனத்தொகை இல்லை (0.0%).

| அட்டவணை 4.2: பிரிவுகளுக்கு அமைய சனத்தொகை வேறுபாடு - ஊவா மாகாணம் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| பிரதேசம் | மொத்த சனத்தொகை | நகர | | கிராமிய | | தோட்ட | |
| | எண்ணிக்கை | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| பதுளை | 815,405 | 69,800 | 8.6 | 591,707 | 72.6 | 153,898 | 18.9 |
| மொனராகலை | 451,058 | - | - | 442,710 | 98.1 | 8,348 | 1.9 |
| ஊவா | 1,226,463 | 69,800 | 5.5 | 1,034,417 | 81.7 | 162,246 | 12.8 |
| இலங்கை | [illegible] | 3,704,470 | 18.2 | 15,753,322 | 77.4 | 901,647 | 4.4 |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

(தொடரும்)

## ஊரடங்கு...

டங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டிருந்த நிலையில் நாளை வியாழக்கிழமை 7 மணி வரை ஊரடங்கு உத்தரவு இவ்வாறு நீடிக்கப்பட்டுள்ளது. (ம)

## ராஜபக்ஷக்...

சமல் மற்றும் பசில் ஆகியோரின் தந்தை ஆவார்.

கொழும்பில் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது நேற்று முன்தினம் மகிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்களால் தாக்குதல் நடத்தியதை அடுத்து ஆத்திரமடைந்த பொது மக்களால் டி.ஏ.ராஜபக்ஷவின் சிலை உடைக்கப்பட்டது.

நேற்று முன்தினம் மெதமுலனவில் உள்ள டி.ஏ.ராஜபக்ஷவின் நினைவிடம் அடித்து உடைக்கப்பட்ட நிலையில் நேற்று அவரது சிலை தகர்க்கப்பட்டது. (ம)

## துப்பாக்கிச்...

காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் மீது மகிந்த ஆதரவுக் குழுவினர் நடத்திய தாக்குதலை தொடர்ந்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன முன்னாள் அமைச்சர்கள், எம்.பிக்கள் உள்ளிட்ட அரசியல்வாதிகள் வீடுகள், சொத்துக்கள் தொடர்ச்சியாக தீவைக்கப்பட்டும், அடித்து நொருக்கியும் சேதமாக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறான நிலையிலேயே வன்முறைகளில் ஈடுபட்டு பொதுச் சொத்துக்களைச் சூறையாடுபவர்கள் மற்றும் தனிப்பட்ட நபர்களுக்கு தீங்கிழைக்கும் வகையில் செயற்படுவோர் மீது துப்பாக்கிச் சூடு நடத்த முப்படையினருக்கு அதிகாரம் அளித்து பாதுகாப்பு அமைச்சு உத்தரவிட்டுள்ளது. (ம)

## பிரதி...

வொன்றினால் தாக்கப்பட்டதில் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு - கங்காராம விஹாரைக்கு அருகில் நேற்று இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது, கூட்டத்தை கலைக்க பொலிஸார் வானத்தை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் இடம்பெற்ற வேளையில் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து சிவில் உடையில் இருந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

தாக்குதலில் இருந்து தப்பிப்பதற்காக, அங்கிருந்து அவர் ஓடி தப்ப முயன்றபோதிலும், குறித்த குழுவினர் பின் தொடர்ந்து அவரை தாக்கியுள்ளனர்.

எனினும், தாக்குதல் சம்பவத்திலிருந்து பொலிஸார் அவரை மீட்டு பாதுகாப்பாக அங்கிருந்து அனுப்பிவைத்துள்ளனர்.

காலிமுகத்திடலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலவரத்தின் போது முன்னாள் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவுடன் பிரதிப் பொஸ்மா அதிபர் இருக்கும் புகைப்படம் சமூக வலைத்தளங்களில் பதிவாகியுள்ளது.

அத்தோடு தாக்குதலை தடுக்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என அவர் மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ம)

## திருமலை...

எனக்கருதி நேற்று காலை முதல் பொது மக்களால் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

திருகோணமலை கடற்படை முகாம் வாயிலில் முன்னெடுக்கப்பட்ட குறித்த போராட்டத்தில் பெருந்திரளான பொது மக்கள் பங்கேற்றிருந்தனர்.

நேற்றுக் காலை முதல் முன்னெடுக்கப்பட்ட குறித்த போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மாலை அளவில் அவ்விடத்தினை விட்டு கலைந்து சென்றுள்ளனர்.

தற்போது திருகோணமலை நகரானது பொது மக்களது நடமாட்டம் இல்லாது வெறிச்சோடிக் காணப்படுவதுடன் நகரில் குறிப்பாக குறித்த கடற்படைத் தளத்திற்கு பிரவேசிக்க கூடிய வீதிகள் அனைத்திலும் வீதித் தடைகள் ஏற்படுத்தப்பட்டு இராணுவத்தினரது பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளதனை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. (ம)

## 8 பேர் பலி;...

கள் எரிக்கப்பட்டுள்ளதோடு 65 வீடுகள் சேதமாக்கப்பட்டுள்ளன.

உயிரிழந்த 8 பேரில் ஆறு பேர் மேல் மாகாணத்திலும், இருவர் தென் மாகாணத்தில் நடந்த வன்முறையின்போதும் பலியாகியுள்ளனர்.

மேல் மாகாணத்தில் மாத்திரம் 15 வாகனங்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்டுள்ளதுடன், 29 வாகனங்களுக்கு தீ வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாணத்தில் 8 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளதுடன் 23 வீடுகள் சேதமடைந்துள்ளன.

தென் மாகாணத்தில் 7 வீடுகள் தீயினால் சேதமடைந்துள்ளதுடன் 9 வீடுகள் தாக்குதல்களால் சேதமாக்கப்பட்டுள்ளன.

மேலும், தென் மாகாணத்தில் 5 வாகனங்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளன.

சப்ரகமுவ மாகாணத்தில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களில் ஒன்பது வாகனங்கள் தீக்கிரையாக்கப்பட்டதுடன் மேலும் இரண்டு வாகனங்கள் சேதமாக்கப்பட்டுள்ளன.

மேலும் அம்மாகாணத்தில் எட்டு வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளதுடன் 5 வீடுகள் சேதமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்களில் ப்ராளுமன்ற உறுப்பினரொருவரும் பிரதேச சபைத் தலைவரொருவரும் உப பொலிஸ் பரிசோதகரொருவரும் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரும் உள்ளடங்குவதாக பொலிஸ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## மகிந்த...

பாக தங்கியுள்ளதாக தெரிவித்து, அக்கடற்படைத் தளம் முன்பு நேற்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்ட நிலையிலேயே நாமல் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன், நாங்கள் யாரும் நாட்டை விட்டு தப்பியோட மாட்டோம். இது தொடர்பாக அதிக பொய்யான தகவல்கள் பரப்பப்பட்டு வருகின்றன என்றும் நாமல் கூறியுள்ளார். (ம)

## அங்கஜன்...

உறுப்பினரின் பதாகைக்கு தீ வைக்கப்பட்டுள்ளது.

குறித்த அலுவலகத்தின் முன்பாக நேற்று செவ்வாய்க்கிழமை இரவு கூடிய சிலர் பதாகைக்கு தீ வைத்து விட்டு தப்பிச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ம)

# இசைக் கலைஞர் இராஜின் வீட்டின் மீது தாக்குதல்

(கொழும்பு)

இலங்கையின் பிரபல இசைக் கலைஞர் இராஜ் வீரரட்னவின் வீட்டின் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இனந்தெரியாத நபர்களால் வீட்டின் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வீட்டின் மீது பல்வேறு பொருட்களை வீசி எறியும் காட்சிகள் சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்டுள்ளன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தேர்தல் பிரசாரத்தில் முக்கியமான பங்களிப்பினை இராஜ் வழங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# ராஜபக்ஷ குடும்பத்தவரின் மற்றுமொரு வீடு தீக்கிரை



(கொழும்பு)

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷவின் வீடும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

செவனகல கிரிப்பன் அர பிரதேசத்தில் உள்ள சஷீந்திரவுக்கு சொந்தமான வீடே நேற்று முன்தினம் இரவு ஒரு குழுவினரால் இவ்வாறு தீயிட்டு கொளுத்தப்பட்டுள்ளது.

இத்தாக்குதலில் வீடு முற்றாக சேதமடைந்துள்ளதுடன் வீட்டில் இருந்த தளபாடங்களும் தீக்கிரையாகியுள்ளன.

குறித்த பிரதேசத்தின் பாதுகாப்பு நிலைமைகள் பொலிஸாரினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதால் நேற்று காலை செவனகல பிரதேசத்தில் மிகவும் அமைதியான சூழல் நிலவியது. (ம)

# கட்சித் தலைவர்கள் கூட்டம் இரத்து; பாராளுமன்றம் கூட்டப்படமாட்டாது

## சபாநாயகர் அறிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் வரை பாராளுமன்றத்தை கூட்டாதிருக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இன்று இடம்பெறவிருந்த கட்சித் தலைவர்களின் கூட்டமும் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னரே மீண்டும் பாராளுமன்றம் கூட்டப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம)

### மறு அறிவித்தல் வரை

# அதிபர், ஆசிரியர்கள் கடமைக்கு சமுகமளிக்கமாட்டார்கள்

## இலங்கை ஆசிரியர் சங்கம்

(கொழும்பு)

அதிபர், ஆசிரியர்கள் மறு அறிவித்தல் வரை கடமைக்கு சமுகமளிக்கமாட்டார்கள் என இலங்கை ஆசிரியர் சங்க உப தலைவர் ஆ. தீபன் திலீசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கத்தினர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டின் இன்றைய அசாதாரண சூழ்நிலையை கருத்தில் கொண்டு பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் குறித்து சமயோசிதமாக செயற்படுமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

காலிமுகத்திடல் போராட்டம் மீதான அடக்குமுறையை கட்டவிழ்த்துவிட்டு, இதன் மூலம் முழுமையான இராணுவ ஆட்சியை உருவாக்கும் நோக்கிலேயே கோட்டாபய அரசாங்கம் செயற்படுகின்றது.

தமது ஆட்சிக்கான அதிகார போதையில், சிங்கள மக்களுக்கு பொய்களைக் கூறிய ஆட்சியாளர்கள் - தமிழினத்தை இனவழிப்புச் செய்து இன்று தன் சொந்த இனத்தின் ஜனநாயக போராட்டங்களையே நசுக்க முனைந்து, பாரிய வன்முறைச் சம்பவங்களை உருவாக்கியிருக்கிறார்கள்.

கட்டுமீறிய இன்றைய சூழலில், இந்த கொலைகார, ஊழல், அடக்குமுறை ஆட்சியாளர்கள் மக்கள் மட்டத்திலிருந்து அகற்றப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும். எனவே ஜனாதிபதி கோட்டாபய உள்ளிட்ட அரசாங்கம் அகற்றப்படும் வரையில் அனைத்து தொழிற்சங்கங்களும் வேலை நிறுத்தத்தை தொடரவுள்ளோம்.

இதன்படி அனைத்து ஆசிரியர்கள், அதிபர்கள் மே 10 ஆம் திகதி முதல் தொடர் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளோம் என்பதையும், பணிப்பகிஸ்கரிப்பின் போது, விடுமுறை தொடர்பாக விண்ணப்பிக்கவோ அல்லது விடுப்பு குறித்து அறிவிக்கவோ வேண்டியதில்லை என்பதையும் அறியத்தருகின்றோம்.

எனவே அதிபர், ஆசிரியர்கள் மறு அறிவித்தல் வரை கடமைக்கு வரமாட்டார்கள் என்பதுடன், இன்றைய அசாதாரண சூழ்நிலையை கருத்தில் கொண்டு பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் குறித்து சமயோசிதமாக செயற்படுமாறும் கேட்டுக்கொள்கின்றோம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஜனநாயகம், உறுதித்தன்மை, பொருளாதார மீட்சி

# இந்தியா முழுமையான ஆதரவு

## இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம்

(கொழும்பு)

**இலங்கையின் ஜனநாயகம், உறுதித்தன்மை மற்றும் பொருளாதார மீட்சிக்கு இந்தியா ஆதரவு அளிக்கும் என்று இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.**

பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கைக்கு இந்த ஆண்டு மட்டும் 3.5 பில்லியன் டொலர் மதிப்பிலான ஆதரவு வழங்கப்பட்டுள்ளது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், "இலங்கை மக்களுடைய நலனில் இந்தியா எப்போதும் கவனம் செலுத்தும் என்றும் அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையில் ஜனநாயகம், உறுதித்தன்மை, பொருளாதார மீட்சி ஏற்படுவதை இந்தியா முழுமையாக ஆதரவளிக்கிறது.

மிக அருகில் உள்ள அண்டை நாட்டுடன் வரலாற்று ரீதியான தொடர்பை கொண்டுள்ளது இந்தியா.

அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் இலங்கை மக்களுக்கு ரூ.27,000 கோடி மதிப்புள்ள உதவியை இந்தாண்டு இந்தியா வழங்கியது. தற்போதைய இக்கட்டான சூழலில் இருந்து இலங்கை மக்கள் மீண்டும் வர உதவி செய்தது இந்தியா.

இந்திய மக்களும் உணவு, மருந்துப் பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை இலங்கை மக்களுக்கு வழங்கியுள்ளனர்.

எனவே ஜனநாயக முறையில் மக்கள் எடுக்கும் முடிவுகளை இந்தியா ஆதரிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழியில் 22 பரப்புக்காணி 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு. (நிலப்பரப்பு)

- A9 வீதியில் இருந்து 150m தூரம்
- லேடன் கொம்பனி பின்புறம்
- நாவற்குழி சந்தியில் இருந்து 500m தூரம்
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம்
- நல்ல சூழல்
- 20 அடிப் பாதையுடன்

முன்பகுதியாக உள்ள காணி
**1 பரப்பு - 7 இலட்சம்**

பின்பகுதியாக உள்ள காணி
**1 பரப்பு - 5 இலட்சம்**

(11344)

**077 658 5999, 074 043 6673**


# கீரிக்கடிக்கிலக்கான வயோதிப மாது மரணம்

## புலோலியில் சம்பவம்

(கரணவாய்)

கீரிக்கடிக்கு இலக்கான வயோதிப மாது ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் உயிரிழந்த வயோதிப மாது கீரி கடித்ததன் காரணமாக உயிரிழந்ததாக மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் புற்றளை, புலோலி தெற்கைச் சேர்ந்த பாலசுந்தரம் மங்கையற்கரசி (வயது-60) என்பவராவர்.

மேற்படி மாதுவிற்கு கடந்த 2ஆம் மாதம் 23ஆம் திகதி கீரியொன்று கடித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து அவரின் உடலில் ஏற்பட்ட மாற்றத்தை அடுத்து கடந்த மாதம் 30ஆம் திகதி பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

இருந்தும் அவர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் கரவெட்டி மரண விசாரணை அதிகாரி வே. பாஸ்கரன் விசாரணைகளை மேற்கொண்டார். இதன்போது இரண்டு முறை கீரி கடித்ததற்கு தடுப்பூசி பெற்றுக் கொண்டதாகவும் மூன்றாவது தடுப்பூசி பெற்றுக் கொள்ளவில்லை என மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து பிரேத பரிசோதனைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. (ம-33,60,104)


# மரண அறிவித்தல்



## சின்னப்பு பத்மநாதன்

**(ஓய்வுபெற்ற சாரதி - யாழ்.பல்கலைக்கழகம்)**

நல்லூர் அரசடியை பிறப்பிடமாகவும் 82/7, பருத்தித்துறை வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட சின்னப்பு பத்மநாதன் நேற்று (10.05.2022) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு - சிவக்கொழுந்து தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - மாணிக்கம் தம்பதியரின் பாசமிகு மருமகனும் கமலாதேவியின் பாசமிகு கணவரும் தனுஜாவின் (ஆசிரியை - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) அன்புத் தந்தையும் டிக்சனின் பெரியதந்தையும் விமலனின் (ஆதித்யா பிறிண்டேர்ஸ்) பாசமிகு மாமனாரும் ஆதித்யா, அபிசாந் ஆகியோரின் அன்புப் பேரனும் வாமதேவியின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (12.05.2022) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

82/7, பருத்தித்துறை வீதி,
3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (11345)

தகவல்: குடும்பத்தினர்
077 715 9730, 021 221 5306


### வடமராட்சி வெற்றிலைக்கேணியில்

# கணவனைக் கொன்று புதைத்த மனைவி

## பொலிஸ் விசாரணையில் அம்பலம்

(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணிப் பகுதியில் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட நபர் மனைவியினால் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டதாக விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது என மருதங்கேணிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

விநாயகபுரம், வெற்றிலைக்கேணி, முள்ளியான் என்ற முகவரியைச் சேர்ந்த தாசன் சிவஞானம் (வயது-42) என்ற நபர் நேற்று முன்தினம் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட நிலையில் அது குறித்த தகவல் நேற்று வெளியாகியிருந்தது.

சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொண்ட மருதங்கேணிப் பொலிஸார்,

முதற்கட்ட விசாரணையில் கொலை செய்யப்பட்டவரின் மனைவியும் பிறிதொரு நபரும் இணைந்து கொலை செய்து புதைத்தமை தொடர்பில் தெரிய வந்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

நீதிமன்ற அனுமதியின் பின்னர் சடலம் அகழ்ந்தெடுக்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-60)


# O/L ENGLISH
## Past Paper Seminar

Day 01 - Part I (review)
Day 02 - Part II (review)

Contact: 076 577 6048

(11341)

**உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் கொள்வனவு மற்றும் சந்தைப்படுத்தல்**

பனங்கட்டி, பனாட்டு, மிக்சர், வடகம், அச்சாறு, [illegible] போன்ற பல்வேறு உள்ளூர் உற்பத்திகளை தயாரிப்பவர்கள் தொடர்பு கொள்ளவும்.



(C-4270)

தொடர்புகளுக்கு
**0777-068-777**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.05.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.